Registered as a NewsPaper

விலை ரூபா 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-09 | 25-08-2005 | வியாழக் கிழமை | ஓசை-189



கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12425)

# யுத்தநிறுத்த ஒப்பந்த நடைமுறையாக்கம்

# ஒஸ்லோவில் பேச்சு நடாத்த அரசு மறுப்பு!

## தன்னாட்சியை வலுப்படுத்துமெனக் கலக்கம்

**யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செம்மையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் பேச்சு நடத்துவதற்கு சிறிலங்கா அரசு மறுப்புத்தெரிவித்துள்ளது. ஏற்கனவே போர்நிறுத்தத்தை செம்மையாகப் பேணுவது தொடர்பான பேச்சுவார்த்தை ஒஸ்லோவில் நடைபெறலாமெனத் தகவல்கள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.**

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் நடைமுறையை மீளாய்வு செய்து இருபகுதியினரும் அதனை முழுமையாகக் கடைப்பிடிப்பதற்கு ஏதுவான வழிமுறைகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு நோர்வே விடுத்த அழைப்பை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் ஏற்றுக் கொண்டு சிறிலங்கா அரசுத்தரப்புடன் பேச்சு நடத்துவதற்கு கடந்த வெள்ளிக்கிழமை இணக்கம் தெரிவித் திருந்தது.

இது பற்றி விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பால சிங்கம் நோர்வேத் தரப்பின் ஊடாக சிறிலங்கா அரசிற்கு அறிவித்திருந் தார்.

இது பற்றி அரசுத்தரப்பின் பெயர் குறிப்பிடவிரும்பாத பேச்சாளர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்; அரசுக்கும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக சுற்றாடலில் இரவில் இராணுவம் குவிப்பு!

(நல்லூர்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சுற்றாடலில் இரவு நேரங்களில் அதிக எண்ணிக்கையில் இராணுவத்தினர் கடந்த மூன்று நாட்களாக வழமைக்கு மாறாக குவிந்து நிற்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இப் பகுதிகளில் ஏற்கனவே பகல் நேரங்களில் அதிக எண்ணிக்கையான இராணுவத்தினர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஆயுதங்களுடன் நிறுத்தப்பட்டு கடமையாற்றி வருகின்றார்கள்

இத்தகைய நிலைமையில் மீண்டும் அதிக எண்ணிக்கையான இராணுவத்தினர் கறுப்பு உடைதரித்து இரவு நேரத்தில் நிற்பதையிட்டு அப்பகுதியிலுள்ள பொதுமக்கள் மத்தியிலும் பல்வேறு சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன.

(14ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்த நிலைமையை சரிவரப் பேணுவதில் பாரிய நெருக்கடி விரைவில் உருவாகலாம்

### - கண்காணிப்புக் குழுவிடம் ஞானம் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் என்ன நிலைமை காணப்பட்டதோ அதே நிலையே தற்போதும் மீண்டும் ஏற்பட்டுள்ளது. இதே நிலை தொடருமானால் தொடர்ந்து போர் நிறுத்த நிலைமையினைச் சரியாகக் கடைப் பிடிப்பதில் பாரிய பிரச்சினை ஏற்படும் என்று வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானம் இலங்கை போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் உடனான சந்திப்பில் தெரிவித்துள் ளார்

இலங்கை போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் தலைவருக்கும் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் ஞானத்திற்கும் இடையில் நேற்று பி.ப 1.10 மணி முதல் பி.ப.2.15 மணி வரை வவுனியா மாவட்ட அரசியல் துறை காரியாலயத்தில் இடம்பெற்றது இந்தச்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தை அரசன்குளத்தில் சோதனை நிலையம்!


### - படையினர் நேற்றுமுதல் கெடுபிடி

(வவுனியா)

ஓமந்தை அரசன்குளத்தில் படையினர் நேற்று சோதனை நிலையம் ஒன்றை அமைந்து ஏ-9 வீதி ஊடாக பயணிக்கும் பொதுமக்கள் மீது அடையாள அட்டை பதிவு, சோதனை ஆகிய கெடுபிடிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஓமந்தை சோதனை நிலையத்தில் இருந்து வவுனியா நோக்கி ஒரு கிலோமீற்றர் தூரத்திலேயே படையினர் இச்சோதனை நிலையத்தை அமைத்துள்ளனர். இந்தப் பகுதியில் முன்னரும் சோதனை நிலையமொன்று நிறுவப்பட்ட நிலையில் அதற்குக் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்ட நிலையில் அது அகற்றப்பட்டது தெரிந்ததே .(10)

## வெளிவிவகார அமைச்சர் இன்று இந்தியா பயணம்



சிறிலங்காவில் புதிய வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்ற அநுரா பண்டாரநாயக்க இன்று வியாழக்கிழமை இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் இந்தியத் தலைவர்களின் அழைப்பையேற்று இவர் அங்கு செல்லவுள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையை அடுத்து வெற்றிடமான வெளிவிவகார அமைச்சுப் பதவிக்கு அநுரா பண்டாரநாயக்க கடந்த திங்கட்கிழமை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

## புலிகள் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்க அரசு சர்வதேச நாடுகளுக்கு தொடர்ந்து நிர்ப்பந்தம்

(கொழும்பு)

கொல்லப்பட்ட வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் கொலையைக் கண்டிக்குமாறும் தமிழீழ விடுதலைப்புலிகளின் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்குமாறும் சிறிலங்கா சர்வதேச நாடுகளிற்கு இராஜதந்திர அழுத்தத்தைப் பிரயோகிக்க முயன்று வருகின்றது.

கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களினூடாக மேற்படி நாடுகளிற்கு மென்மை சார்ந்த அழுத்தங்களைக் கொடுக்கும் முயற்சியில் வெளிநாட்டு அமைச்சின் அலுவலர்களும் அரசியல்வாதிகளும் ஈடுபட்டு வரும் அதேவேளை இன்றைய அரசின் பங்காளரான ஜே.வி.பி இதற்கான நேரடிப் போராட்டத்தில் குதித்துள்ள நிலையிலேயே தற்போது இலங்கை விவகாரத்தில் அக்கறையுள்ள நாடுகளிலேயே அந்நாடுகளிலுள்ள தமது முகவர்கள் மூலம் அழுத்தம் கொடுக்கும் நிகழ்வுகளை சிறிலங்கா ஆரம்பித்துள்ளது.

குறிப்பாக ஐரோப்பிய மற்றும் அவுஸ்திரேலிய அமெரிக்கக் கண்டங்களிலுள்ள நாடுகளிற்கு தங்கள் தூதரகங்களினூடாக இவ்வாறான வேண்டுகோளை மேற்படி நாடுகளிற்கு விடுத்து வரும் அதேவேளை இவ்வேண்டுகோள்கள் அந் நாடுகளின் சிரத்தைக்கு உட்படாத காரணத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஊடகத்துறையை நசுக்க அரசாங்கம் முயற்சி மேற்கொள்கிறது

### - தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கண்டனம்

(கொழும்பு)

தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும் தமிழ் ஊடக நிறுவனங்கள் மீதும் தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம்பெறுவதை இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ளது. அத்துடன் இவ்வாறான நடவடிக்கைகளை உடனடியாகத்தடுத்து நிறுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றியம் சிறிலங்கா அரசாங்கத்திடம் பகிரங்கமான வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் கொழும்புக் கோட்டையில் இடம்பெற்ற ஜே.வி.பி யின் ஆர்ப்பாட்டம் தொடர்பான செய்திகளை சேகரிப்பதற்காகச் சென்ற சுடரொளிப் பத்திரிகையின் செய்தியாளரான யதுர்சன் பிரேமச்சந்திரன் ஜே.வி.பி. உறுப்பினர்களால் மிகவும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இரு மீனவர்கள் காணாமல் போன சம்பவம்; மணற்காட்டில் பொதுமக்கள்–படையினர் முறுகல்!

யாழ். வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப்பகுதியில் சிறிலங்காக் கடற்படையினருக்கும் மீனவர்களுக்கும் இடையே நேற்றுப்பிற்பகல் பெரும் முறுகல்நிலை ஏற்பட்டது. இதனையடுத்து கடற்றொழிலாளர் வீதிகளில் இறங்கி கடற்படையினருக்கு எதிரான போராட்டங்களிலும் ஈடுபட்டனர். பொதுமக்களது ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அப்பகுதியில் பெருந்தொகையான படையினர் குவிக்கப்பட்டதால் அங்கு பெரும் பதற்றம் நிலவிவருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மணற்காட்டிலிருந்து கடற்றொழிலுக்கு சென்ற இரு மீனவர்கள் காணாமற்போயிருந்தனர். நேற்றுக்காலை இவ்விரு மீனவர்களையும் தேடிப் புறப்பட்ட மீனவர்களைத் தேடுதலில் ஈடுபட அனுமதிக்காத கடற்படையினர் காணாமல் போன இரு மீனவர்களையும் தாமே கைது செய்து தடுத்து வைத்திருப்பதாகவும் அவர்களை நண்பகலுக்கு முன்னர் விடுதலைசெய்ய

(14ஆம் பக்கம் பார்க்க)

# காணி அனுமதிப்பத்திரம் வழங்க நடவடிக்கை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத் தினரால் எதிர்வரும் 29 ஆம் திகதியன்று புதுமுறிப்புக் கிராமத்தைச் சேர்ந்த 103 காணி உரிமையாளர்களுக்கு நிரந்தரக்காணி அனுமதிப் பத்திரம் (எல்.டி.ஓ) பொமிற் வழங்கப்படவுள்ளது.

புதுமுறிப்பு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் வைத்து அன்றையதினம் காலை 9.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணி வரை நிரந்தரக் காணி அனுமதிப்பத்திரம் வழங்கப் படவுள்ளதெனவும் காணி அனுமதிப்பத்திரங்களைப் பெறுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்கும் வண்ணம் கரைச்சி பிரதேச செயலக காணி அலுவலர் செ.ஸ்ரீரெங்கநாதன் தெரிவித்துள்ளார். (சோ)

## வரிவிளம்பரம்

### காணி விற்பனைக்குண்டு

கிளிநொச்சி-கனகபுரம் 10ஆம் பண்ணையில் உள்ள இரண்டு ஏக்கர் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- எஸ்குகன் இல-104, 10 ஆம் பண்ணை. கனகபுரம். (6664)

### வீடு வாடகைக்கு வழங்கப்படும் (நிறுவனத்திற்கு மட்டும்)

சி.இரகுபதி இல.1583, 4 ஆம் குறுக்கு, இரத்தினபுரம், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள வீடு வாடகைக்கு விடப்படும். தொலைபேசி இல.0777286194 (6666)

### தவறிவிட்டது

சுப்பிரமணியம் ஆனந்தராசா என்பவருடைய மாவட்ட அடையாள அட்டை 22.08.2005 புளியம் குளத்திற்கும் பளைக்கும் இடையில் பேருந்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நாதன்ஸ் சித்த ஆயுர்வேத மருந்தகம்கனகபுர வீதி கிளிநொச்சி என்னும் முகவரிக்கு ஒப்படைக்கவும். (6667)

---

## 2ஆம் லெப்.மாலதியின் நினைவு நாளையும் தமிழீழ பெண்கள் எழுச்சி நாளையும்

முன்னிட்டு

## மகளிர் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும் நாடகப் போட்டி-2005

- அனைத்து மாவட்டங்களிலிருந்தும் இப் போட்டியில் பங்குபற்றலாம்.
- மாவட்டத்திலமைந்துள்ள பொதுஅமைப்புக்கள் கலை சார்ந்த மன்றங்களிலிருந்தும் பங்குபற்றலாம்.

### விதிமுறைகள்:-

- நாடகப் போட்டியில் பங்குபற்றுவோர் எமது போட்டி விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
- நாடகத்தில் 15-20 பேர் நடிக்கலாம். பக்க வாத்தியம் பாடகர் தவிர.
- சிறந்த நடிகர்களுக்குரிய பரிசில்கள் இருப்பதால் ஒருவர் இரு பாத்திரத்திற்கு மேல் நடிக்க முடியாது.
- நாடகம் 30-40 நிமிடங்களுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- வயது வேறுபாடு அற்று இருபாலாரும் கலந்து கொள்ளலாம்.
- போட்டியில் பங்குபற்றும் நாடகங்கள் யாவற்றிற்கும் நடுவர்களின் தீர்வே இறுதி முடிவாக ஏற்றுக் கொள்ளப்படும்.
- போட்டியில் பங்குபற்றும் பொதுஅமைப்புக்கள் கலை சார்ந்த மன்றங்கள் தங்கள் பதிவுகளை 05.09.2005 இற்கு முன் மேற்கொள்ளவும்.
  இதற்கான மேலதிக விபரத்தினை அந்த மாவட்ட அரசியல்துறை செயலகத்திலும் அந்த மாவட்ட அரசியல்துறை மகளிர் செயலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.
- நாடகப் போட்டிக்கான விண்ணபத்தினைப் பூர்த்தி செய்து பங்கு பற்றும் அமைப்புக்கள் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அல்லது மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளரின் உறுதிப்படுத்தலுடன் பங்குபற்றும் அமைப்பின் அல்லது மன்றத்தின் தலைவர் அல்லது நாடகத்தின் நெறியாளரின் ஒப்பமும் இருத்தல் வேண்டும்.
- இவை தேசியத்தை வலுப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

"போட்டிக்கான கருப்பொருள்"

(01) "சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்"

(02) போராட்டத்தின் வளர்ச்சி-சமூக பெண்களில் ஏற்படுத்திய மாற்றங்கள்.

(03) இன்றைய மக்களின் சமகால வாழ்வியலும் சமுதாயச் சீர்திருத்தமும்.

(04) இன்றைய சமூகத்தில் மாறி வரும் சிந்தனைகள்.

- மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்

நிர்வாகி,
இசைக்கல்லூரி,
மகளிர் கலைபண்பாட்டுக்கழகம்
பரவிப்பாஞ்சான்,
4 ஆம் வாய்க்கால்,
கிளிநொச்சி.

(சி.12581)

---

## கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரியினரின் ஏற்பாட்டில்

தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்திருக்கும் திருச்சி லோகநாதன் அவர்களின் புதல்வனும் "தீயினில் எரியாத தீபங்களே", "சுட்டும் விரலால் சுட்டிக் காட்டு", "நீண்ட வானைக்கேளு" பாடல்கள் புகழ் பாடகர் திரு T.L மகராஜன் அவர்களின்

## "சிறப்பு தமிழிசை அரங்கு"

**காலம் - 25.08.2005 புதன் (இன்று) மாலை 4.30 மணி**

**இடம் - கிளிநொச்சி கலைபண்பாட்டு மண்டபம்**

**அனைத்துத் தமிழிசை ரசிகர்களையும். கலை ஆர்வலர்களையும் இசையின்பம் பெற அழைக் கிறோம்.**

கிளி/நுண்கலைக் கல்லூரியினர்

(சி.12587)

---

## சுகாதார சேவைகள் திணைக்களம் - யாழ்ப்பாணம்

### தாதியர் பயிற்சி - ஆட்சேர்ப்பு

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு பின்வரும் தகைமைகளைத் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து (விவாகமாகாத) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மொத்த எண்ணிக்கையில் 5% ஆண்களாவர்.

01 **கல்வித்தகைமைகள்:**

(அ) க.பொ.த உயர்தரம் விஞ்ஞானம் 3 பாடங்களில் சித்தி பரீட்சை 2000,2001,2002,2003 இல் தோற்றியிருக்க வேண்டும்.

(ஆ) க.பொ.த. (சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய விடயங்கள் உட்பட 04(நான்கு) பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06(ஆறு) பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

02 **ஏனைய தகைமைகள்:-**

(அ) வயது 19-09-2005 ஆம் திகதியில் 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) உயரம் 4 அடி10 அங்குலத்திற்கு குறையாதிருக்க வேண்டும்.

(இ) திருமணமாகாதவராக இருக்க வேண்டும்.

(ஈ) நாட்டின் எப்பாகத்திலும் கடமையாற்ற வேண்டும்.

(உ) நல்ல சுகதேகி.

(ஊ) வதிவிடச் சான்றிதழ் (3 ஆண்டுகள்) வாக்காளர் பட்டியல் பிரதி இணைக்கப்பட்ல் வேண்டும்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவிடத்து பெற்றோரின் வாக்காளர் பட்டியலின் பிரதியுடன் பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய முறை:-**

மாதிரி விண்ணப்பப் படிவங்களை சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் பிரதி மாகாண சுகாதாரப் பணிமனை யாழ்ப் பாணத்திலும. பார்வையிடலாம்,விண்ணப்பப் படிவங்களை 81/2,131/2அங்குல அளவுள்ள தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தலாம்.

கடித உறையின் இடது பக்க மேல் முலையில் "மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள்ளல்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:-**

பணிப்பாளர் (நிர்வாகம் 701 சுகாதார பராமரிப்பு போசனை ஊவா வெல்லஸ் அபிவிருத்தி அமைச்சு " சுவசிரியாய" 385 வணபத்தேகம விமல வன்சதேரா் மாவத்தை கொழும்பு-10இற்கு பதிவுத்தபாலில் 2005-09-19 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

(04) பயிற்சித்திட்டம்:- 03 ஆண்டுகள் (அக்காலத்தில் கொடுப்பனவு வழங்கப்படும்)

மேலதிக விபரங்களுக்கு பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளலாம். இது பற்றிய முழு விபரமும் 18.08.2005 ஆம் திகதி வர்த்தமானிய பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளது.

**வைத்தியகலாநிதி சி.எஸ். சொலமன்,**
**பதில் மாகாணப் பிரதிப் பணிப்பாளர்,**
**தாய் சேய் நல வைத்திய அதிகாரி,**
**சுகாதார சேவைகள்- யாழ்ப்பாணம்.**

(சி.12586)

---

## வட கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித்திட்டத்தின் (NECCDEP) கீழான சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்பலப்படுத்தல் திட்டம் (TAARP)

### மாவட்ட திட்ட அலுவலகம் புனரமைத்தலுக்கான கேள்வி கோரல்

மேற்படி திட்டத்தின் கீழ் மாவட்ட கேள்விச்சபையினால் பின்வரும் வேலைக்காக கேள்விகள் வரவேற்கப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த வேலை விபரம் | இ[illegible]ட் | மீளளிக்கப்படாத தொகை | மீளளிக்கப்படும் தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | KN/TAARP/OFF/2005 | மாவட்ட திட்ட அலுவலகம் புனரமைத்தல் | M9 | 500,00 | 5000,00 |

01 ஆர்வமுடைய ஒப்பந்தகாரர்கள் கேள்விப் படிவங்களையும் மேலதிக தகவல்களையும் மாவட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர். வடகிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித்திட்டம், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

02 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 03.09.2005 ஆம் திகதி 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர், கேள்விச்சபை,கரையோர சமுதாய அபிவிருத்தித்திட்டம், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும். கேள்விகள் யாவும் அன்றே பரிசீலிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். கேள்விச்சபை கூடும் பொழுது விண்ணப்பித்த ஒப்பந்தகாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் சமுகமளித்தல் வேண்டும்.

**குறிப்பு:-** விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் தபால் உறையின் இடது பக்க மூலையில் "மாவட்ட திட்ட அலுவலகம் புனரமைத்தலுக்கான கேள்வி விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**தி.இராசநாயகம்.**
**மாவட்ட கேள்விச்சபை தலைவரும்.அரச அதிபரும்.**
**கிளிநொச்சி.**

(சி.12617)



மேற்குக்கரை சனூரில் தனது குழந்தையைத் தாங்கியவாறு இஸ்ரேலியப் படையினரை நோக்கி யூதக்குடியிருப்புப் பெண்மணி சத்தமிடுகின்றார்.

# காஸாவிலிருந்து இஸ்ரேல் இராணுவம் செப்ரெம்பரில் முற்றாக வெளியேறும்

## இராணுவ அதிகாரி தகவல்

(காஸா)

**இஸ்ரேலியத் துருப்பினர் காஸாவிலிருந்து செப்ரெம்பர் இறுதியில் வாபஸ் பெற்றுவிடுவார்கள் எனவும், இது ஏற்கனவே குறிப்பிட்ட திகதிக்கு முன்னராக இடம்பெறவிருக்கிறது எனவும் இஸ்ரேலிய இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.**

எனவே, இதற்கு முன்னதாக 15ஆயிரம் இஸ்ரேலிய குடியிருப்பாளர்கள் காஸாவிலிருந்தும் மேற்குக் கரையிலிருந்தும் வெளியேற்றப்படுவார்கள் என அவர் தெரிவித்தார். ஆறு நாட்களுக்குள் 25 குடியிருப்புக்கள் வெளியேற்றப்பட்டமை அமெரிக்க சனாதிபதியின் மத்திய கிழக்கு சமாதான வரைவுத் திட்டத்தின் மூலம் பலஸ்தீன அரசை நிறுவுவதற்கு ஏதுவாக அமைகின்றது. சனூர் மற்றும் கொமேஸ் ஆகிய மேற்குக்கரைப் பிரதேசங்களில் யூத தீவிரவாத தேசியவாதிகளின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை இஸ்ரேலிய பொலிசார் தடுத்து நிறுத்தியுள்ளனர். பலஸ்தீனியர்களின் உதவியுடன் இஸ்ரேலிய இராணுவத்தினர் காஸாவில் 21 குடியிருப்புக்களையும் மேற்குக்கரையில் நான்கு சிறு கிராமங்களிலுள்ள கட்டடங்களையும் பத்து நாட்களில் இடித்து முடிக்கத் திட்டமிட்டுள்ளார்கள். முழுக் காஸா பிரதேசமும் பலஸ்தீனிய ஆட்சியின் கீழ் வந்துவிடும். ஆனால், ஒரு சிறு கடற்பிரதேச விமான ஓடுபாதைப் பகுதி ஒன்று மாத்திரம் இஸ்ரேலின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும்.

இதேவேளை, அமெரிக்க சனாதிபதி இது சமாதானத்திற்கு நம்பிக்கைத் திறவுகோலாக இருக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், பலஸ்தீனியர்கள் அவர்களது சொந்த அரசாங்கத்தை நடத்துவதில் நம்பிக்கை கொண்டிருப்பார்கள். இதேவேளை, இஸ்ரேலியர்கள் சமாதானமான பலஸ்தீன அரசு ஒன்று உருவாவதை நிச்சயம் நம்புவார்கள் எனக் கூறினார்.

# சந்தீவு கடலில் மூழ்கியது 20ஆயிரம் மக்கள் ஓட்டம்

பங்களாதேஷில் சிட்டகொங் அருகே உள்ள சந்தீவு கடலில் மூழ்கியதில் அங்கிருந்த இருபதாயிரம் பேரும் கடல் தணணீர் புகுந்த வீடுகளைவிட்டு வெளியேறி ஓட்டம் பிடித்தனர்.

கடல் அலை ஆவேசமாக வீசியதற்கு பௌர்ணமி தான் காரணம் என்று வானிலை ஆராட்சியாளர்கள் கூறினர். சிட்டகொங் நகரிலும் தடுப்பை உடைத்துக்கொண்டு அலைகள் ஊருக்குள் புகுந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஈராக்கில் அமெரிக்கப்படை நான்கு ஆண்டுகள் நீடிக்கும்

(பாக்தாத்)

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினர். இன்னும் நான்கு ஆண்டுகளுக்கு அங்கேயே தங்கியிருப்பார்கள் என அமெரிக்க இராணுவத் தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் சதாம் ஹூசைன் ஆட்சி அகற்றப்பட்டதைத் தொடர்ந்து அங்கு அமெரிக்கப் படை பாதுகாப்புப் பணிகளை ஈராக் வீரர்களுடன் இணைந்து கவனித்து வருகிறது. அமெரிக்கப் படையினர் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இதுவரை 1200 இற்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினர் பலியாகிவிட்டனர்.

அமெரிக்காவுக்கு இதனால் ஏகப்பட்ட செலவும் ஏற்பட்டுள்ளது. இதனால் ஈராக்கிலிருந்து அமெரிக்கப்படை வாபஸ் பெற வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வருகிறது. ஆனால் இதை ஏற்க அதிபர் புஷ் மறுத்துவிட்டார்.

இதுபற்றி அமெரிக்க இராணுவ தளபதி ஒருவர் கூறும்போது; ஈராக்கில் ஒரு இலட்சம் அமெரிக்கப் படையினர் உள்ளனர். குறைந்தது இன்னும் நான்கு ஆண்டுகளுக்கு அவர்கள் ஈராக்கில் தங்கி இருப்பர் என்றும் தெரிவித்தார்.

# வெளியேற்றப்பட்டவர்களுக்கு வேலை தடையை நீக்கியது ஐக்கிய அரபு எமிரேட்

(டுபாய்)

நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டவர்கள் வேலைக்கு திரும்ப விதித்திருந்த ஆறுமாதத் தடையை ஐக்கிய அரபு எமிரேட் நேற்று முன்தினம் திடீரென நீக்கியது. இதனால், அந்நாட்டில் இருந்து வெளியேற்றப்பட்ட இந்தியர்கள் உட்பட பல்வேறு நாட்டினர் மீண்டும் வேலைக்குத் திரும்பும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

ஐக்கிய அரபு எமிரேட்டில் இந்தியர், பாகிஸ்தானியர் உட்பட ஆசியாவைச் சேர்ந்த பல்வேறு நாட்டினர் பணி புரிகின்றனர். இவர்களில் தகுந்த ஆவணங்கள் இல்லாமல், சட்ட விரோதமாக பணி புரிந்தவர்களை அந்நாடு வெளியேற்றியது. இவர்கள் ஐக்கிய அரபு எமிரேட்டுக்கு மீண்டும் வேலைக்கு வருவதைத் தடுக்கவும் நடவடிக்கை எடுத்தது.

நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டவர்களுக்கு ஆறு மாதங்களுக்கு வேலை தரக் கூடாது என்று தடையும் விதித்தது. குறுக்கு வழியில் மீண்டும் அவர்கள் நாட்டுக்குள் நுழைவதைத் தடுக்க, குடியுரிமை அலுவலக கணினிகளில் அவர்களின் புகைப்படம் மற்றும் விபரங்களைப் பதிவு செய்தது. இதன் மூலம், அவர்கள் எந்த வகையில் வந்தாலும் தடுக்க வழி செய்யப்பட்டிருந்தது.

# பெருவிமானம் வீழ்ந்து நெருங்கியது; எண்பது பேர் உடல்சிதறிப் பலி!

(லிமா)



பெருநாட்டின் பயணிகள் விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் அதில் பயணம் செய்த எண்பதிற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளதாகவும், இருபதிற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் லிமாவிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

டான்ஸ் ஏயார் லைன்ஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான போயிங் - 737 விமானம் தலைநகர் லிமாவிலிருந்து புறப்பட்டுச்சென்று சில நிமிடங்களில் மோசமான வானிலை காரணமாக விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுழன்றடித்த காற்றில் விமானம் சிக்கித் தாறுமாறாகப் பறந்ததாகவும், அப்போது விமானம் கட்டுப்பாட்டை இழந்ததாகவும், விமானத்தை அவசரமாகத் தரையிறக்க விமானி மேற்கொண்ட முயற்சி பயனாளிக்கவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தீவிரவாதிகள் மிரட்டல்

'பங்களாதேஷில் இஸ்லாமிய ஆட்சியை அறிவிக்காவிட்டால், மீண்டும் பயங்கரத் தாக்குதல் நடத்துவோம்' என்று தடை செய்யப்பட்ட 'ஜமாத் உல் முஜாகிதீன்' தீவிரவாத அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது.

பங்களாதேஷ் முழுவதும் கடந்த வாரம் வெடிகுண்டுகள் வெடித்துச் சிதறின. மொத்தமுள்ள 66 மாவட்டங்களில் 65 மாவட்டங்களில் நாட்டு வெடிகுண்டுகள் வெடித்ததில், இரண்டு பேர் பலியாகினர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இந்நிலையில், 'பங்களாதேஷில் இஸ்லாமிய ஆட்சியை அறிவிக்க வேண்டும். இல்லாவிட்டால், நாட்டில் மீண்டும் பயங்கரத்தாக்குதல் நடத்துவோம்' என்று முஜாகிதீன் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.



ஆப்கானிஸ்தானில் கொல்லப்பட்ட அமெரிக்க லான்ஸ் கோப்ரல் பிரையன் மொன்கொமரியின் உடல் இறுதி மரியாதைக்காக தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

# சீனா–ரஷ்ய இராணுவம் கூட்டுப் பயிற்சி இரு நாடுகளின் உறவைப் பலப்படுத்தும்

(பீஜிங்)

சீனாவும்-ரஷ்யாவும் இணைந்து கடல் மற்றும் தரை இராணுவப்பயிற்சி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

1800 இற்கும் மேற்பட்ட சீன - ரஷ்ய துருப்புக்கள் இப்பயிற்சி நடவடிக்கைகளில் கலந்து கொண்டனர். இருநாடுகளுக்கிடையிலான இந்த நடவடிக்கைகள் கடந்த 18ஆம் திகதி ஆரம்பமாகி நிறைவடைகிறது.

இக்கூட்டுப் பயிற்சி நடவடிக்கைகள் குறித்து எவ்விதமான கருத்துக்களையும் அதில் கலந்து கொண்ட அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் ரம்ஸ்பீல்ட் தெரிவிக்கவில்லை.

சீனாவும் - ரஷ்யாவும் மேற்கொண்டு வரும் இந்தப் பயிற்சி நடவடிக்கைகள் சாதாரணமானதானவே நடைபெற்று வந்ததாக அவர் கூறினார்.

ரஷ்யா ஆயுத தளபாடங்களை சீனாவிற்கு வழங்கிவரும் நிலையில் சமாதான இலக்கு 2005 எனும் இந்தப் பயிற்சி நடவடிக்கையினூடாக ஆயுதம் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகள் அதிகரிக்கக்கூடும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# சுன்னி முஸ்லிம்களின் எதிர்ப்புக்கு மத்தியில் ஈராக் புதிய அரசியல் யாப்பு அங்கீகரிக்கப்படும்

(பாக்தாத்)

ஈராக்கில் ஷியாக்களாலும் குர்திஷ்களாலும் வரையப்பட்ட அரசியல் யாப்பைத் தொடர்ந்தும் சுன்னி முஸ்லிம்கள் எதிர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், ஈராக்கிய சுன்னி முஸ்லிம்கள் இந்த அரசியல் யாப்பை ஏற்றுக் கொண்டு அமைதியாகவும் சமாதானமாகவும் வாழவிரும்புகின்றார்களா அல்லது வன்முறைகள் நிறைந்த சூழ்நிலையில் வாழவிரும்புகிறார்களா என்பதை அவர்களே தீர்மானிக்க வேண்டும் என அமெரிக்க சனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

ஈராக்கின் ஷியாக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்கம் இந்த வாரம் அநேகமாக பாராளுமன்றத்தில் தமது அரசியல் யாப்பை சுன்னி முஸ்லிம்களின் எதிர்ப்புக்கு மத்தியில் அங்கீகரித்துக் கொள்ளும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலை ஈராக்கில் தொடர்ந்தும் வன்முறைகளுக்கு வழிவகுக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஈராக்கில் சுன்னி முஸ்லிம்கள் அரசியலமைப்பில் ஷியாக்களுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படுவதைக் காரணமாக வைத்தே தமது எதிர்ப்பைத் தெரிவிக்கின்றார்கள். எண்ணெய் வளம் மிக்க ஈராக்கின் தென் பகுதியில் தமக்கு சுயாட்சி கோரிவந்த ஷியாக்களே ஈராக்கின் பெரும்பான்மை மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# வன்னியில் உதயமாகும் பால் பதனிடும் தொழிற்சாலை

வன்னிப் பெருநிலப்பரப்பில் விவசாய உற்பத்தியும், கால் நடை வளர்ப்பும் சிறப்பான நிலையில் காணப்படுகின்றது. இவற்றில் ஒரு தன்னிறைவான பொருளாதாரத்தை இம் மக்கள் எட்டியுள்ளனர்.

நீர்வளமும், நில வளமும், இங்கு சிறப்புற அமையப் பெற்றதே இத்தன்னிறைவுக்கு காரணமாகும். ஆயினும் விவசாயமும், கால் நடை வளர்ப்பும் மேலும் மேம்பாடடைய வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

இந்த உற்பத்தியாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டிய



தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப்பொறுப்பாளர் சின்னண்ணை

தேவை உள்ளது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் இவற்றை கவனத்தில் எடுத்து இவர்களை ஊக்குவிப்பதில் பல திட்டங்களை வகுத்து செயற்படுத்தி வருகின்றது.

அந்த வகையில் கால் நடைபண்ணையாளர்களையும், கால் நடை வளர்ப்போரையும் ஊக்குவிக்க சிறந்த திட்டங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

கால்நடை அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் வன்னிப் பிரதேசத்தில் "பால் பதனிடும் தொழிற்சாலை" உருவாக்கப்படவுள்ளது.

இந்தப் பால் பதனிடும் தொழிற்சாலையின் நோக்கம் அதன் எதிர்கால திட்டம் என்பன குறித்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் துணைப் பொறுப்பாளர் சின்னண்ணை அவர்களுடன் பேசினோம். அவர் தெரிவித்த கருத்துக்களை இங்கே தருகிறோம்.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் உள்ள கால்நடை பண்ணை யாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் பால் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


வன்னிப் பெரு நிலப்பரப்பு தவிர்ந்த தென்பகுதி மற்றும் ஏனைய பிரதேசங்களில் பாலின் விலை கணிசமாக உயர்ந் துள்ளது. ஆனால் வன்னி நிலப்பரப்பில் பாலின் விலை குறைந்தளவிலேயே உள்ளது. இதனால் இங்கு உற்பத்தி யாகும் பாலை ஏனைய பிரதேசங்களுக்கு சந்தைப்படுத்துவதன் மூலம் உற்பத்தியாளர்கள் கூடுதலான இலாபத்தை ஈட்டி தொழிலை மேம்படுத்தி மேலும் உற்பத்தியை அதிகரிக்கக் கூடிய நிலை இருக்கின்றது.

சந்தைப்படுத்தல் வசதி இன்மையால் கால் நடைகள் அழிந்து போகும் நிலையும், கால்நடை பண்ணையாளர்கள் தொடர்ந்தும் வறுமைக் கோட்டின் கீழ்வாழ வேண்டிய நிர்ப்பந்த மும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறானதொரு நிலைமை மயை நீக்கும் நோக்குடனேயே இந்தத் தொழிற்சாலை ஆரம் பிக்கப்படவுள்ளது.

வன்னிப் பெருநிலப்பரப்பில். இருந்துபெறப்படும் பாலை பண்ணையாளர்களிடம் இருந்து கொள்வனவு செய்து அதனை பதப்படுத்தி பால்மா பைக்கற்றுக்களாகவும், மற்றும் ஏனைய பால் சார்ந்த உணவுப் பொருட்களாகவும் எந்தெந்த முறையில் சந்தைப்படுத்தலை அதிகரிக்க முடியுமோ, அந்த வகையிலான உற்பத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கிளிநொச்சி நகர்ப் பகுதியில் பலகோடி ரூபா செலவில் இந்த தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. இதற்கான கட்டடப் பணிகள் எண்பது சதவீதம் பூர்த்தியாகி உள்ளன. இதற்கான தொழில் உபகரணங்கள் புலம்பெயர்ந்த மக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குமுழமுனை, முள்ளியவளை பகுதியில் பெருமளவான கால் நடை பண்ணைகள் உள்ளன. அதே போன்று ஒட்டுசுட்டான், பாண்டியன் குளம் பகுதிகளிலும், பெருமளவான கால்நடைகள் உள்ளன. அந்தந்தப் பிரதேசங்களில் வைத்து பாலை கொள்வனவு செய்து அந்த இடங்களி லேயே பதப்படுத்தி வைப்பதற்கான குளிர் சாதன வசதிகள் உருவாக்கப்படவுள்ளன.



நிர்மாணிக்கப்பட்டு வரும் பால் பதனிடும் தொழிற்சாலை

போக்குவரத்து, ஏற்றுமதி வசதிகளை நோக்காகக் கொண்டே தொழிற்சாலை கிளிநொச்சி நகரில் அமைக்கப்படுகின்றது.

இந்தத் திட்டம் சீராக தனது இலக்கை எட்ட வேண்டுமாயின் கால் நடை பண்ணையாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். அதற்கான திட்டங்கள் வகுக்கப் பட்டுள்ளன.

நல்லின கால்நடைகளை இனப் பெருக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் கால் நடை அழிவுகள் மற்றும் நோய்களை தடுப்பதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன.

கால்நடை வைத்திய அதிகாரிகள் மூலமாக கால் நடை மருத்துவ வசதிகளை உயர்ந்த நிலையில் பேண நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் கால் நடைவைத்தியர்களுக்கு வன்னியில் பெரும் பற்றாக்குறை நிலவுகின்றது. கால்நடை வைத்தியர்களை இப் பகுதியில் அதிகரிப்பதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் தொடர்பு கொண்டுள்ளோம். வெகு விரைவில் வைத்தியர்களை வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஊடாக கால் நடை வைத்தியம் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேச்சல் தரைகள் தற்போது அழிவுற்ற நிலையில் உள்ளன. இதற்காக ஒவ்வொரு பிரதேசங்களிலும், மேய்ச்சல் தரைகள் உருவாக்கப்படவுள்ளன. அத்துடன் பண்ணையாளர்களின மேம்பாட்டிற்கான உதவிகள் பல வழிகளிலும், மேற் கொள்ளப்பட்டுள்ளன.

கால் நடை அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் விவசாய செய்கையாளர்களுடன் கலந்துரையாடி அவர்களது பயிர்ச் செய்கைசெயகக் காலம் திட்டமிடப்பட்டு மேற் கொள்ளப்படவுள்ளது. அத்துடன் கால்நடை அபிவிருத்திக்கு இடையூறு இல்லாத வகையில் விவசாய செய்கையை மேற்கொள்ளத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

அதிகளவான பாலைத் தரக்கூடிய 'ஜேசி' இனங்கள் இச் சூழலுக்கு சாத்தியமாகவில்லை. இச் சூழலுக்கு ஏற்ற அதிகளவு பாலைத்தரக் கூடிய நல்ல கறவைகளை கொண்டு வருவதற்கும் அதே வேளை இங்கு உள்ள நல்ல கறவை இனங்களை அழியாது பாதுகாப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்காக வெளி மாவட்ட கால் நடைதுறையினருடன் தொடர்பு கொண்டு அவற்றை கொள்வனவு செய்து பண்ணை யாளர்களுக்கு வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த ஆண்டின் இறுதிக்குள் இத் தொழிற்சாலையில் பணியினை ஆரம்பிக்க முடியும் என எதிர்பார்க்கின் றோம். அதற்காக நிர்மாணப் பணிகள் விரைவு படுத்தி மேற் கொள்ளப்பட்டு வரு கின்றன.

கால்நடை வளர்ப் பாளர்கள் அல்லது கால் நடை வளர்த்து தமது பொருளாதாரத்தை மேம்படுத்த விரும்புபவார்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற முடியும். முன் வருபவர்களை ஊக்குவிக்க தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தயாராகவுள்ளது.

-கம்ஷிகாசுகுமார்
-சிவரஞ்சன்

# பிரதமரின் உறவினர்களால் பொலிசார் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

சிறிலங்காப் பிரதமர் தலைமையின கீழ் இயங்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் மேற் கொண்ட தாக்குதலில் கண்டி, பெரதெனியாவில் நான்கு பொலிசார் காயமடைந்துள்ளனர். இச் சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 3.40 மணியளவில் இடம் பெற்றது.

இந்த அதிகாரிகள் மது போதையில் வாகனத்தைச் செலுத்தி வந்தபோது வீதி ஒழுங்கை மீறினர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டு பொலிசாரால் தடுத்துவைக்கப்பட்டார்கள். இதன் போது பொலிசாரை இவ் வதிகாரிகள் தாக்கியுள்ளனர். தாம் பிரதமரின் உறவினர்கள் என்ற வகையிலேயே இவர்கள் நடந்து கொண்டதாகவும், இதனடிப்படையிலேயே பொலிசார் தாக்கப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது இத் தாக்குதலில் காயமடைந்த நான்கு பொலிசாரும் கண்டி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் கள்.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட வாகனத்தில் பயணம் செய்த ஏழு பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். இவர்களில் நான்கு பேர் மிக்கூடிய மதுபோதையில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# காலபோக பயிர்ச்செய்கை குறித்த திட்டமிடல் கூட்டம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு கமநல சேவை திணைக்களத்தில் கால போக பயிர்ச்செய்கை தொடர்பான திட்டமிடல் கூட்டம் நேற்று முன்தினம் புதுக் குடியிருப்பு பிரதேச கமக்கார அமைப்புத் தலைவர் தவம் தலைமையில் இடம் பெற்றது.

இக் கூட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேச கால போக பயிர்ச்செய்கை தொடர்பாக கிராமங்களில் ஒன்று கூடல்களுக்கான காலம் தீர்மானிக்கப் பட்டது. அத்துடன் இரவு வேளைகளில் கட்டாக்காலி கால் நடைகளால் ஏற்படக்கூடிய இடையூறுகள், போக்குவரவு, பாதிப்பு, விபத்துக்கள் நகர்ப் பகுதிகளில் கட்டடங்களை அசுத்தம் ஏற்படுவதை தவிர்க்கும் நோக்கத் துடன் கட்டாக்காலி கால் நடைகளை கட்டுப்படுத்துவதற்கான நடைமுறைக ளும் ஆராயப்பட்டன. மேலும் அடுத்த மாதம் ஒன்பதாம் திகதிக்கு முன்னர் கட்டாக்காலி கால் நடைகள் தொடர்பாக ஆராயப்பட்ட தீர்மானங்கள் நடை முறைக்கு கொண்டு வரப்படுவதாகவும், தீர்மானிக்கப்பட்டது.

இங்கு கருத்துரைகளை பெரும்பாக உத்தியோகத்தர் புதுக்குடியிருப்பு, பிரதேச பொருண்மிய மேம்பாட்டு இணைப்பாளர், இலங்கை வங்கி முகாமை யாளர் ஆகியோர் வழங்கினர். (19)

# ஐ.ம.சு.முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் சனாதிபதி தேர்தலில் மகிந்தவை ஆதரிக்க முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சனாதிபதி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஒன்பது கட்சிகள் அவருக்கு ஆதரவு தெரி விக்க தீர்மானித்திருப்பதாக தெரிய வருகின்றது.

இதுதொடர்பாக நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கட்சித் தலைவர் கள் கருத்துத் தெரிவிக்கையில் மேற்படி தகவலை வெளியிட் டுள்ளனர். இதன் போது கருத்துத் தெரிவித்த மங்கள சமர வீர கூறுகை யில் எதிர்வரும் சனாதிபதித் தேர்த லில் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக் காக ஐ.தே.கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள் கட்சியின் முக்கியஸ்தர்களின் ஆதரவை பெற் றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப் டும் என்று தெரிவித்துள்ளார்.

# இந்து சமுத்திரத்தில் சுனாமி எச்சரிக்கை மையம்

(கொழும்பு)

இந்து சமுத்திரக்கடற்பிராந்தியத்தில் அமெரிக்கா சுனாமி எச்சரிக்கை மையத்தை இரு ஆண்டுகள் ஒப்பந்த அடிப்படையில் நிறுவத் தீர்மானித் துள்ளது.

ஏற்கனவே யப்பான் இவ்வாறான எச்சரிக்கை மையத்தை நிறுவமுன்வந்த சமயம் இந்தியா தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது (32)

# வீதிப்போக்குவரவை கண்காணிக்க பொலிசாருக்கு பதிலாக இராணுவம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்.தீவகப்பகுதிகளில் வீதிப்போக்குவரத்து விதிமுறைகளைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபடுவதாக வாகன ஓட்டுனர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.**

வீதிப்போக்குவரத்து விதிமுறைகளை கண்காணிப்பதற்கும் ஓட்டுனர் மற்றும் வாகனங்களின் உரிமைப் பத்திரங்கள், ஆவணங்களை பரிசோதனை செய்வதற்குமான அதிகாரம் பொலிசாருக்கு மட்டுமே உண்டு.

எனினும் யாழ்.தீவகப்பகுதியில் சில இடங்களில் வீதிப்போக்குவரத்து பொலிசார் செய்யவேண்டிய போக்குவரத்து விதிமுறைபேணும் நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆயுதங்கள் சகிதம் இராணுவத்தினர் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைகள் பொது மக்களை அச்சம் கொள்ளவைத்துள்ளது. (33)

# படையினரின் ஆதரவுடன் மண் அகழ்வு நடவடிக்கை

(தென்மராட்சி)

சிறிலங்காப் படையினரின் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்ட பகுதிகளிலே படையினரின் ஆதரவுடன் இச்சட்ட விரோதமண் அகழ்வு இடம் பெற்று வருவதாக சூழல் பாதுகாப்பு அமைப்புத் தெரிவித்துள்ளது.

நாவற்குழியில் புதிதாக அமைக்கப்பட்ட பாலத்திற்கு அருகில் கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் சட்ட விரோத மண் அகழும் ,நடவடிக்கையால் பிரதான சாலையும், இப் பகுதியும் பாதிப்படைந்து வருவதாக சூழல் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது. அத்துடன் நுணாவில் சந்தியில் உள்ள படை முகாமிற்கு மிக அருகிலும் கண்டி வீதிக்கு சமீபமாகவும் இம் மண் அகழ்வு தீவிரமாக இடம்பெற்று வருவதால் மழை காலங்களில் சாலைகள் சிதைவடையவும், தரைப்பகுதி பிளவுபட்டு கீழே இறங்கவும் வாய்ப்புக்கள் உருவாகியுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (28)

# மதகுகளை புனரமைக்க போதியளவு நிதி ஒதுக்கீடு இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சேதமடைந்த நிலையில் காணப்படும் மதகுகளைப் புனரமைப்பதற்கு போதியளவு நிதி ஒதுக்கீடுகளை அரசாங்கம் செய்யவில்லை என்று வீதிஅபிவிருத்தி அதிகாரசபையினர் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலுள்ள ஏராளமான மதகுகள் நீண்டகாலமாக புனரமைப்புச்செய்யப்படாத நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றன. இதனால் மழைகாலங்களில் வெள்ள நீர் வழிந்து ஓடமுடியாத நிலையில் தேங்கிநின்று வீதிகளைச் சேதமாக்குவது மட்டுமன்றி மக்களின் வாழ்விடங்களுக்குள்ளும் வெள்ள நீர் உட்புகும் நிலைமை காணப்படுகிறது.

இந்த நிலைமைகளினால் ஏற்பட்டுள்ளபாதிப்புகளை கவனத்தில் கொண்டுசேதமடைந்த நிலையில் உள்ளமதகுகளை புனரமைக்க முயற்சித்தும்-உரியநிதி ஒதுக்கீடின்மையால் இம் மதகுப்புனரமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளது.

அரசின் இத்தகைய அசமந்தப் போக்கு குறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (33)

-மக்களின் பிரச்சினை குறித்த ஆராய-

# இல.மனிதஉரிமைகள் உயர்மட்டக்குழு மண்டைதீவுப் பகுதிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள மண்டை தீவுப் பகுதியில் ஆக்கிரமிப்பிற்குள்ளாகியிருக்கும் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயர்மட்டக் குழுவொன்று அடுத்த மாத முற்பகுதியில் அங்கு செல்லவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இடம்பெயர்விற்குள்ளான மக்களிற்கான உதவிகள் திட்டத்தின் கீழ் மண்டைதீவு தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில், திட்டத்தின் பணிப்பாளர் சேனக திசநாயக்க மற்றும் மாவட்ட இணைப்பாளர்கள் கொண்ட குழுவே விஜயம் செய்யவுள்ளது.

1990 ஆம் ஆண்டில் இப் பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளையடுத்து மக்கள் முற்றாக இடம் பெயர்ந்திருந்தனர். எனினும் தற்போதைய சமாதான சூழலையடுத்து 400குடும்பங்களைச் சேர்ந்த 1400 பேர் மீளக் குடியமர்ந்துள்ளனர்.

எனினும், மண்டைதீவை முழுமையாக ஆக்கிரமித்துள்ள கடற்படையினர் அங்கு உயர் பாதுகாப்பு வலயத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளதுடன் கஞ்சதேன எனும் கடற்படைத் தளத்தையும் அமைத்துள்ளனர்.

அதேவேளை தம்மால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதியில் சேதமடைந்த மருத்துவமனைகளையோ பாடசாலைகளையோ மீளத்திருத்த அனுமதி மறுத்து வரு வதுடன் கடற்றொழிலாளர் மீது கெடுபிடிகளையும் அமுல்படுத்தி வருகின்றனர்.

இக் கெடுபிடிகள் தொடர்பான பல முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு செய்யப்பட்டதையடுத்தே விசேட உயர் மட்டக் குழு அங்குசென்று ஆய்வுகளை மேற்கொள்ளவுள்ளது.

அத்துடன் மனித உரிமைகள், கல்வி, சுகாதாரம் மற்றும் தொழில் முயற்சிகள் தொடர்பாகவும் விரிவான அறிக்கையினை வெளியிடவுள்ளதாகவும் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (27)

# பொதுமக்களின் காணிகளுடாக இராணுவத்தினர் வீதி அமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் வடக்கு இராணுவ அதி உயர்பாதுகாப்பு வலயத்துள் முடக்கிவைக்கப்பட்டுள்ள பொது மக்களின்காணிகளுடாக தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு செல்வதற்கான புதிய வீதி ஒன்றை இராணுவத்தினர் அமைத்து வருகின்றனர்.

தமது அனுமதி இன்றி காணிகளை சுவீகரித்து அவற்றினூடாக புதிய வீதியை இராணுவம் அமைத்து வருகின்றமை சட்டவிரோதமான செயற்பாடு என்று அப்பகுதி காணிகளின் உரிமையாளர்கள் கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளனர்.

அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் உள்ள இவ்வைத்தியசாலை அண்மையிலேயே மக்களின் பாவனைக்கு விடப்பட்டது.

இராணுவம் தமது போக்குவரத்துத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் வீதிகளை பொதுமக்களும், நோயாளர்களும் போக்குவரத்து செய்ய அனுமதிப்பது தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும் என்பதைக் காரணம் காட்டியே நோயாளர்கள், பயன்படுத்துவதற்காக இவ் வீதியை இராணுவம் அமைத்து வருகின்றது.

தனிப்பட்ட இராணுவநலனை மையமாகக்கொண்ட இப்புதிய வீதி அமைப்பிற்கான பொதுமக்களது காணிகளை சட்டவிரோதமாக இராணுவம் சுவீகரிப்பதனை ஏற்க முடியாது என அக்காணிகளின் உரிமையாளர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். (33)

# "பசீரா" இன கோழிக்குஞ்சுகள் விநியோகிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டகால்நடை வளர்ப்போர் கூட்டுற சங்கங்களின் சமாசத்தால் 'பசீரா' இன கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே கோழிக்குஞ்சு வளர்ப்போர், பண்ணையாளர்கள் தமது பதிவுகளை தமது பகுதிகளில் உள்ள கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திலோ அல்லது கால்நடை வைத்திய அலுவலகத்திலோ மேற்கொள்ளும்படி யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் கோழி வளர்ப்பது தற்பொழுது அதிகரித்து இருப்பதாகவும் இத்தொழிலில் ஈடுபடுவோரை ஊக்கப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சமாசம் தெரிவித்துள்ளது. (28)

# பொம்மைவெளியில் வைத்தியசாலைக் கழிவுகள்; அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனாவைத்தியசாலை கழிவுகள் பொம்மைவெளி மற்றும் கல்லுண்டாய் ஆகிய பகுதிகளில் கொட்டப்பட்டு வருகின்றமைக்கு யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆட்சேபம் தெரிவித்துள்ளது..

யாழ்.போதனாவைத்தியசாலை கழிவுகள் மேற்படி பகுதிகளில் கொட்டப்படுகின்றமையால் அப்பகுதியில் குடியிருக்கும் மக்கள் பெரும் சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்வதுடன், அங்கு சூழல் மாசடைகின்ற தன்மையும் ஏற்பட்டுள்ளது.

இதைவிட வைத்தியசாலையில் இருந்து எடுத்து சென்று கொட்டப்படும் இரசாயனக் கழிவுகளால் இப் பகுதியில் இருக்கும் சதுப்புநில தாவரங்களும் அழிவடைந்து வருகின்றமையும் சுட்டிக் காட்டப் படுகின்றது.

இது குறித்து தமது ஆட்சேபத்தை வெளியிட்டுள்ள அரசசார்பற்றநிறுவனங்களின் இணையம் வைத்தியசாலைக் கழிவுகளை சூழலுக்கு தீங்கு இல்லாதவிதத்தில் அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளது. (33)

# துரித அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கூட்டுறவு சங்கக் கிளைகள் புனரமைப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்தில் துரித அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் பல நோக்கு கூட்டுறவுசங்க கிளைகளை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பல நோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளை புனரமைக்க 10 இலட்சம் ரூபாநிதியை புனரமைப்பு மறுவாழ்வு அமைச்சு ஒதுக்கீடு செய்திருப்பதாக கொடிகாமம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் திருநாவுக்கரசர் தெரிவித்துள்ளார்.

கச்சாய், பலாலி, கரம்பக்குறிச்சி போன்ற கிராமங்களில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகள் புனரமைப்பு செய்யப்பட இருப்பதாகவும் மற்றும் உணவுகளை களஞ்சியப்படுத்த போதுமான இடவசதிகள் இல்லாமையால் சிரமங்களை தாம் எதிர்நோக்கியுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து உடனடியாக கவனத்தில் எடுக்கும் படியும் அவர் தெரிவித்துள்ளார். (28)

## பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

வீதிஅபிவிருத்தி அதிகார சபையின்யாழ்.பிராந்திய பொறியியலாளர் ஜெ.சீனிவாசன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வீதி அபிவிருத்தி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பிரதம பொறியியலாளராக பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.இவர் அடுத்த மாதம் தொடக்கம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான பொறியியலாளராக கடமையாற்றவுள்ளார்.இதேவேளை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ்.பிராந்திய பிரதம பொறியியலாளராக வி.சுதாகரன் நியமிக்கப் பட்டுள்ளார். (33)

# கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு மின்சாரதகன வசதி ஏற்படுத்தக் கோரிக்கை

சாவகச்சேரி நகர கண்ணாடிப்பிட்டி மயானத்தில் மின்சார தகன வசதியை ஏற்படுத்தித்தருமாறு யாழ். அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.


இம்மயானத்திற்கு மின்சார தகன வசதிகளை முன்னுரிமை அடிப்படையில் ஏற்படுத்தித்தரவேண்டுமென கண்ணாடிப்பிட்டி மயான அபிவிருத்திக்குழு யாழ் அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளது. கடந்த காலயுத்த நடவடிக்கையால் முற்றிலும் சிதைவடைந்துள்ள இம்மயானத்தை காலத்தின் தேவைக்கேற்ப மறுசீரமைக்கவும் புதிய கட்டடங்களை நிர்மாணிக்கவும் விரைவானதொரு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாகவும் மயான அபிவிருத்திக்குழு தெரிவித்துள்ளது. (28)

# கொடிகாமம் பேருந்து நிலையத்தை திறந்து வைக்கும்படி கோரிக்கை

(கொடிகாமம்)

கொடிகாமம் பருத்தித்துறை சாலையில் புதிதாகக் கட்டப்பட்ட பேருந்து நிலையத்தை மக்கள் பாவனைக்கு விரைவில் திறந்து வைக்க சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு பலமாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை திறந்துவைக்கப்படவில்லை. இதனால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதாகவும் இதுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பிரதேசசபை செயலாளர் கூடிய அக்கறை எடுக்கும்படி பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (28)

# வன்னி மண்ணின் இறுதி மன்ன...
# 202ஆம் ஆண்டு நிறைவு, நினைவு ...



## வீரத்தின் வித்து

அன்று தொட்டு இன்றுவரை "அடங்காப்பற்று" என்னும் சிறப்பைத் தன்னகத்தே கொண்ட "வன்னி" மண்ணின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியன் 202 ஆம் ஆண்டு நிறைவு வெற்றிவிழா இன்று (25.08.2005) கற்சிலைமடுவில் சிறப்பாகக் கொண்டாடுவதில் நானும் செயலகஉத்தியோகத்தர்களும், எமது பிரதேச மக்களும் மனநிறைவடைகின்றோம். வீரம்,வரலாறு,பழமை, பண்பாடு,பாரம்பரியம் எனப் பல்வேறுபட்ட அம்சங்களையும் ஒருங்கிணைத்த வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட இந் நிகழ்வானது வன்னி மண்ணின் பெருமையையும் தனித்துவத்தையும் எடுத்தியம்புவதாக அமைகின்றமையை உணர முடிகின்றது.

மேலும் முல்லைத்தீவு கோட்டையைக் கைப்பற்றிய வன்னிமண்ணின் இறுதித் தமிழ் மன்னனாக மாவீரன் பண்டாரவன்னியன் வீரமறவனாக இனம்காணப்படுவதால் அவனை "வீரத்தின் வித்து" எனக் குறிப்பிடுவது மிகையாகாது. வீரத்தின் வித்துக்கான விழா எடுப்பு சிறக்க என் வாழ்த்துக்கள்.

**செல்வி.சுபாஜினி கந்தையா,**
உதவிஅரசாங்க அதிபர்,
ஒட்டுசுட்டான்.



## மாவீரனுக்கு வெற்றிவிழா

வன்னி மண்ணின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியனுக்கு முல்லைமாவட்ட பண்டாரவன்னியன் அறங்காவற்கழகம் விழா எடுத்துவருவது சிறப்பிற்குரிய ஒன்றாகும். வன்னிமண் வீரம் விளைந்த மண். வாழ்ந்தாலும் வரலாறு வீழ்ந்தாலும் வரலாறு என்பதற்கேற்ப மாவீரன் பண்டாரவன்னியன் வன்னியை ஆளும் போதும்அன்னியருடன் மோதும் போதும்வரலாற்றுப்பதிவுகளுடன் வாழ்ந்தான். என்பதை இன்றைய 202வது வெற்றிவிழா துலங்க வைக்கின்றது 1803ம்ஆண்டு ஆவணிமாதம் 25ம் நாள் மாவீரன் பண்டாரவன்னியன் முல்லைத்தீவில் ஆங்கிலேயர் அமைத்த பாரிய கோட்டையைத்தாக்கி அழித்து அக்கோட்டையை நிர்மூலமாக்கி பீரங்கிகள் உட்பட பல ஆயுதங்களை அள்ளிய வரலாற்று நாளையே இவ்வெற்றிவிழா எமக்கு நினைவூட்டிநிற்கின்றது. அந்த மாவீரனின் அடிச்சுவட்டை பின்பற்றியே எமதுவீரத்தலைவன்அண்ணன்பிரபாகரன் இன்று உலகே வியந்து பார்க்கக்கூடிய விடுதலைப்போரைநடாத்தி சாதனைகளையும் சரித்திரங்களையும் படைத்துநிற்கின்றார்.இவ்வெற்றிவிழா எமது தாயகவிடுதலைக்கு உரம்சேர்க்கும் என்பதில் ஐயமில்லை. இவ்வெற்றி விழாவை ஆண்டு தோறும் சிறப்பாக நடத்திவரும் முல்லை.மாவட்ட பண்டார வன்னியன் அறங்காவற் கழகத்தினரை பாராட்டாமல் இருக்கமுடியாது. மேலும்வெற்றிவிழா சிறக்க எனது வாழ்த்துக்கள்.

**சதாசிவம் கனகரத்தினம்,**
பாராளுமன்ற உறுப்பினர் வன்னி.





## வன்னி மறவனின் மங்காப் புகழ்கூறும் மாபெரும் வெற்றி விழா

"உலைவு இடத்து ஊறு அஞ்சா வன்கண் தொலைவு இடத்து தொல்படைக்கு அல்லால் அரிது" -என்ற

வள்ளுவன் வாக்கிற்கிணங்க வையத்தில், தமிழிற்கு மட்டுமன்றி,தமிழன் வீரத்திற்கும் ஓர் தொன்மையும் வரலாறும் உண்டென்று தன் இறுதி மூச்சுவரை வாழ்ந்து காட்டிய வன்னித்தாயின் வீரமைந்தன், மாவீரன் பண்டாரவன்னியனின் 202 ஆவது வெற்றிவிழாஇன்று!

முல்லை மாவட்ட, பண்டார வன்னியன் அறங்காவற்கழகத்தலைவர்என்றவகையில் எனது மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் அமைந்த,கற்சிலை மடு என்னும் கிராமத்தில், வன்னி மன்னனின் உருவச்சிலை அமைந்துள்ள இடத்தில் மிகவும் கோலாகலமான முறையில்,வீரம் செறிந்த தோளுடைய வெற்றிநாயகனுக்கோர் விழாக்கொண்டாடும்இவ்வேளையில், அதற்குத் தலைமை தாங்கும்பெறுபேற்றினை எண்ணிப் பெருமகிழ்வு எய்துகின்றேன்.

"பார்போர் வீரம் மட்டுமல்ல!

பகைவரும் போற்றும் எமதென்று! கட்டியங்கூறி நிற்கின்றது கற்சிலைமடுவிலுள்ள கற்பொறிப்பு. வன்னிமகனின் வீரத்தினை எதிரியாகிய ஆங்கிலேயனே பாராட்டிக் கல்லிலே பொறித்துச்சென்றது. காலத்தால் அழியாத சான்றாக இலங்குகின்றது.

1802.08.25 அன்று! துப்பாக்கி வேட்டொலிகளாலும், பீரங்கிக்குண்டுகளாலும் தமிழரைத் தோற்கடித்து, துவம்சம் செய்ய வந்த வெள்ளையரின் வல்லாதிக்கத்தை வாள் வீச்சினாலும்,மனோபலத்தினாலும் தகர்த்தெறிந்து,வெற்றிவாகை சூடி நின்றான் வன்னிமைந்தன். ஆயுதம் மட்டுமல்ல! அஞ்சா நெஞ்சமதே! அழியா வெற்றிக்கு அத்திவாரமென அறைகூவி உலகுக்கு வெற்றி முரசறைந்தான் அடங்காப்பற்றின் ஆதித்தன்.

யா/கோ/1636 திரு.சின்னப்பா சின்னத்துரை தமோதரன்.
யா/கோ/1640 திருமதி.தங்கமுத்து சின்னத்தம்பி.
யா/கோ/1642 திரு.கந்தையா தம்பியையா.
யா/கோ/1649 திரு.சுப்பிரமணியக்குருக்கள் திருமலைச்சாமிசர்மா.
யா/கோ/1653 திரு.கந்தர் வேலாயுதம்.
யா/கோ/1655 திருமதி.இரத்தினம் வல்லிபுரம்.
யா/கோ/1658 திரு.இராமலிங்கம் அருளையா.
யா/கோ/1659 திரு.தம்புஅருணாசலம்.
யா/கோ/1660 திருமதி.அன்னம்மா பரமநாதர்.
யா/கோ/1661 திருமதி.சிவமணி தேவராஜன்.
யா/கோ/1662 திரு.நாகலிங்கம் ஆறுமுகம்.
யா/கோ/1676 திரு.சங்கரப்பிள்ளை கந்தப்பிள்ளை.
யா/கோ/1683 திரு.அருளானந்தம் மாணிக்கம்.
யா/கோ/1694 திரு.கதிரவேலு மார்க்கண்டு.
யா/கோ/1695 திருமதி.நாகம்மாள் இராசையா.
யா/கோ/1705 திருமதி.பறுவதம் இரத்தினம்.
யா/கோ/1716 திருமதி.இராசம்மா சொர்ணலிங்கம்.
யா/கோ/1720 திரு.சரவணமுத்து இரத்தினசிங்கம்.
யா/கோ/1723 திருமதி.இராஜேஸ்வரி தியாகராஜா.
யா/கோ/1731 திரு.தம்பிமுத்து சுப்பிரமணியம்.
யா/கோ/1738 திரு.நல்லையா சிவப்பிரகாசம்.
யா/கோ/1746 திரு.சரவணமுத்து சுப்பிரமணியம்.
யா/கோ/1749 திரு.முருகேசு செல்லத்துரை.
யா/கோ/1754 திரு.வல்லிபுரம் சுப்பிரமணியம்.
யா/கோ/1756 திருமதி.சிவஞானம் சந்திரசேகரம்.
யா/கோ/1761 திரு.பொன்னையா சுப்பிரமணியம்.
யா/கோ/1773 திரு.மருதப்பா துரைச்சாமி.
யா/கோ/1775 திரு.கதிரவேலு தம்பியையா.
யா/கோ/1782 திரு.கந்தையா வேலுப்பிள்ளை.
யா/கோ/1794 திரு.ஜோசப் அந்தோனிப்பிள்ளை.
யா/கோ/1808 திரு.சுவாமிநாதன் கனகசபை.
யா/கோ/1826 திருமதி.குணமணி மயில்வாகனம்.
யா/கோ/1829 திருமதி.கோகிலம் இராசதுரை.
யா/கோ/1832 திரு.வேலுப்பிள்ளை முத்துகுமாரு.
யா/கோ/1836 திருமதி.மகேஸ்வரி கைலாயப்பிள்ளை.
யா/கோ/1841 திருமதி.மகேஸ்வரி பூலோகம்.
யா/கோ/1856 திரு.சின்னத்தம்பி நடராசா.
யா/கோ/1857 திரு.இராசரத்தினம் ஞானசுந்தரம்.
யா/கோ/1858 திருமதி.நாகபூரணி கனகசிங்கம்.
யா/கோ/1874 திருமதி.புவனேஸ்வரி தர்மலிங்கம்.
யா/கோ/1881 திரு.செல்லர் பொன்னையா.
யா/கோ/1884 திருமதி.இரதிலஷ்சுமி ஆனந்தகுமாரசாமி.
யா/கோ/1889 திரு.கந்தையா இரத்தினம்.
யா/கோ/1891 திருமதி.இராசமணி இராசரட்ணம்.
யா/கோ/1894 திருமதி.தங்கரத்தினம் இரத்தினவேல்.
யா/கோ/1902 திரு.வல்லிபுரம் சண்முகம்.
யா/கோ/1904 திரு.சின்னத்தம்பி செல்லத்துரை.
யா/கோ/1908 திரு.செல்லப்பா சிவஞானம்.
யா/கோ/1913 திரு.தம்பிப்பிள்ளை சதாசிவம்.
யா/கோ/1919 திருமதி.சிவபாக்கியம் கனகலிங்கம்
யா/கோ/1946 திரு.சண்முகம் துரைரட்ணம்.
யா/கோ/1957 திரு.கந்தையா வேலாயுதம்.
யா/கோ/1963 திரு.ஐயம்பிள்ளை வேலாயுதர்.
யா/கோ/1969 திரு.கந்தையா அரிராசசிங்கம்.
யா/கோ/1980 திருமதி.அன்னம்மா கந்தையா.
யா/கோ/1982 திருமதி.அன்னபூரணியம்மா கிருஸ்ணபிள்ளை.
யா/கோ/1987 திரு.நடராசா பாலசுப்பிரமணியம்.
யா/கோ/1992 திரு.தெட்சணாமூர்த்தி பாலசந்திரன்.
யா/கோ/2011 திரு.நெல்லிநாதபிள்ளை ஜெயசிங்கம்.
யா/கோ/2021 திரு.சுந்தரம் கோபாலசாமி.
யா/கோ/2027 திரு.வன்னித்தம்பி கந்தையா.
யா/கோ/2028 திரு.பண்டாரிகிருஷ்ணர்.
யா/கோ/2036 திருமதி.குணபூசனி முத்துக்குமாரு.
யா/கோ/2042 திரு.சின்னத்தம்பி கனகசுந்தரம்.
யா/கோ/2045 திருமதி.லட்சுமி சின்னாண்டி.
யா/கோ/2061 திரு.சதாசிவம் மகாலிங்கம்.
யா/கோ/2063 திரு.செல்லப்பா நடராஜா.
யா/கோ/2065 திரு.வன்னித்தம்பி நடராசா.
யா/கோ/2070 திருமதி.யோகாம்பிகை நாகேந்திரம்.
யா/கோ/2074 திரு.யோசேப்பு பேரின்பம்.
யா/கோ/2075 திருமதி.பூரணம் இராசையா.
யா/கோ/2091 திருமதி.பராசக்தி கணேசன்.
யா/கோ/2095 திருமதி.பொன்னம்மை பத்மநாதன்.
யா/கோ/2112 திரு.விசுவநாதர் இராசரத்தினம்.
யா/கோ/2118 திருமதி.இராசேஸ்வரி பொன்னுத்துரை.
யா/கோ/2119 திரு.நாகமுத்து இராசரத்தினம்.
யா/கோ/2122 திரு.இராமலிங்கம் மகேஸ்வரன்.
யா/கோ/2126 திரு.சண்முகம் சின்னத்துரை.
யா/கோ/2133 திரு.வேலாயுதபிள்ளை சிவகுருநாதன்.
யா/கோ/2148 திருமதி.சின்னப்பிள்ளை சின்னப்பு.
யா/கோ/2149 திரு.பொன்னையா சண்முகம்.
யா/கோ/2154 திரு.வே.பேரம்பலம் செல்லையா.
யா/கோ/2156 திரு.தம்பாப்பிள்ளை சண்முகநாதன்.
யா/கோ/2161 திருமதி.சொர்ணம் சிவசெல்வம்.
யா/கோ/2164 திரு.கந்தையா சின்னத்துரை.
யா/கோ/2167 திரு.ஆறுமுகம் சுப்பிரமணியம்.
யா/கோ/2172 திருமதி.பரமேஸ்வரி சபாரத்தினம்.
யா/கோ/2196 திரு.இராசரத்தினம் தருமலிங்கம்.
யா/கோ/2206 திரு.சின்னக்குட்டி துரைலிங்கம்.
யா/கோ/2211 திருமதி.தங்கம்மா சோமசுந்தரம்.
யா/கோ/2215 திருமதி.திரவியம் நடராசா.
யா/கோ/2216 திரு.சுந்தரம் தியாகராசா.
யா/கோ/2218 திரு.செல்லர் தம்பிராசா.
யா/கோ/2219 திருமதி.உலகநாயகி சிவப்பிரகாசம்.
யா/கோ/2221 திரு.அருணாசலம் உலகநாதன்.
யா/கோ/2230 திரு.செல்லையா வைரமுத்து.
யா/கோ/2236 திரு.வேலுப்பிள்ளை அப்புத்துரை.
யா/கோ/2254 திரு.கதிரிப்பிள்ளை கணபதிப்பிள்ளை.
யா/கோ/2264 திரு.கணபதிப்பிள்ளை நடராசா.
யா/கோ/2271 திரு.ஆறுமுகம் பொன்னுத்துரை.
யா/கோ/2274 திருமதி.இராசம்மா அப்புப்பிள்ளை.
யா/கோ/2283 திரு.நடராசா சிதம்பரபிள்ளை.
யா/கோ/2284 திரு.நாகலிங்கம் சிதம்பரநாதர்.
யா/கோ/2301 திருமதி.அன்னலட்சுமி தியாகராஜா.
யா/கோ/2312 திரு.தம்பிப்பிள்ளை அப்பாசாமி.
யா/கோ/2324 திரு.பண்டாரி இளையவன்.
யா/கோ/2333 திரு.செல்லையா முத்துக்குமாரசாமி.
யா/கோ/2334 திரு.வேலுப்பிள்ளை மகேஸ்வரன்.
யா/கோ/2336 திரு.சிதம்பரப்பிள்ளை நடராஜா.
யா/கோ/2338 திரு.அம்பலம் நாகலிங்கம்.
யா/கோ/2340 திரு.நாகலிங்கம் நவரத்தினம்.
யா/கோ/2342 திரு.சிதம்பரநாதர் நவரத்தினசிங்கம்.
யா/கோ/2354 திரு.சபாபதி இராசையா.
யா/கோ/2365 திரு.செல்லப்பா சின்னத்தம்பி.
யா/கோ/2370 திருமதி.செல்லம்மா சங்கரப்பிள்ளை.
யா/கோ/2371 திரு.செல்லத்துரை சின்னத்தம்பி.
யா/கோ/2374 திரு.கதிரவேலுசெகராசா.
யா/கோ/2381 திரு.வீரகத்தி தம்பையா.
யா/கோ/2398 திரு.செல்லப்பா குமாரவேலு.
யா/கோ/2404 திரு.பெரியாள் சித்தன்.
யா/கோ/2413 செல்வி.சந்திராதேவி தம்பு.
யா/கோ/2414 திரு.ஐயம்பிள்ளை நடராஜா.
யா/கோ/2429 திருமதி.செல்லம்மா மாணிக்கம்.
யா/கோ/2435 திரு.கட்டையன் சின்னத்தம்பி.
யா/கோ/2443 திரு.கந்தர்தாமு.
யா/கோ/2449 திரு.வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை.
யா/கோ/2453 திரு.கதிரித்தம்பி வல்லிபுரம்.
யா/கோ/2454 திரு.சரவணை வயிரமுத்து.
யா/கோ/2457 திரு.முருகேசு பாலசிங்கம்.
யா/கோ/2463 திரு.சிதம்பரம் கந்தையா.
யா/கோ/2471 திரு.பொன்னையா கந்தையா.
யா/கோ/2474 திரு.தவசிகதிரவேலு.
யா/கோ/2475 திரு.சுப்பன் மாதன்.
யா/கோ/2482 திரு.சித்தன் மாணிக்கன்.
யா/கோ/2486 திரு.சிவகுருநடராசா.
யா/கோ/2491 திரு.முருகர்பொன்னுத்துரை.
யா/கோ/2493 திருமதி.புவனேஸ்வரி திருநாவுக்கரசு.
யா/கோ/2494 திருமதி.அம்மா நல்லதம்பி.
யா/கோ/2510 திரு.வைரவநாதன் சிவசிதம்பரநாதன்.
யா/கோ/2512 திரு.நாகமுத்து செல்லையா
யா/கோ/2517 திரு.மூத்ததம்பி சபாரத்தினம்.
யா/கோ/2526 திரு.அருணாசலம் சிதம்பரநாதன்.
யா/கோ/2527 திரு.தவசி செல்லத்துரை.
யா/கோ/2544 திரு.வைத்திலிங்கம் தியாகராசா.
யா/கோ/2551 திரு.வல்லி வேலன்.
யா/கோ/2556 திரு.பொன்னுத்துரை கந்தசாமி.
யா/கோ/2557 திரு.சரவணமுத்து கிருஷ்ணபிள்ளை.
யா/கோ/2574 திருமதி.அன்னம் மாணிக்கம்.
யா/கோ/2586 திருமதி.கௌரி நாகேந்திரன்.
யா/கோ/2599 திருமதி.ஜெயமலர் கனகரட்ணம்.
யா/கோ/2604 திருமதி.கனகாம்பிகை தாமோதரம்பிள்ளை.
யா/கோ/2606 திரு.ஆறுமுகம் குமரகுரு.
யா/கோ/2619 திரு.கணபதி கோபாலு.
யா/கோ/2621 திரு.சிதம்பரி கிட்ணர்.
யா/கோ/2622 திரு.இளையவன் கதிரவேலு.
யா/கோ/2630 திருமதி.பவளம் கிருஷ்ணன்.
யா/கோ/2631 திருமதி.குணலட்சுமி தருமலிங்கம்.
யா/கோ/2641 திரு.செல்லையா கணபதிப்பிள்ளை.
யா/கோ/2647 திரு.இராசேந்திரம் மகாபுண்ணியம்.
யா/கோ/2660 திரு.சதாசிவப்பிள்ளை முத்துக்குமாரசாமி.
யா/கோ/2661 திருமதி.சரஸ்வதி மகேந்திரன்.
யா/கோ/2662 திரு.காசிப்பிள்ளை மகேசன்.
யா/கோ/2664 திரு.சரவணமுத்து மருதலிங்கம்.
யா/கோ/2674 திரு.கனகசபை நல்லையா.
யா/கோ/2683 திரு.பரமு நடேசு.
யா/கோ/2692 திரு.ஆறுமுகம் பஞ்சாட்சரநாதன்.
யா/கோ/2693 திரு.சின்னத்துரை பத்மநாதன்.
யா/கோ/2694 திரு.இளையதம்பி பசுபதி.
யா/கோ/2702 திருமதி.புவனேஸ்வரி சுப்பிரமணியம்.
யா/கோ/2710 திரு.செல்லப்பா இரத்தினம்.
யா/கோ/2724 திருமதி.சரஸ்வதி இராசதுரை.
யா/கோ/2727 திரு.நாகலிங்கம் இராசதுரை.
யா/கோ/2734 திரு.சண்முகம் இராசலிங்கம்.
யா/கோ/2740 திரு.ஆறுமுகம் சோமசுந்தரம்.
யா/கோ/2750 திரு.இளையதம்பி செல்லத்துரை.
யா/கோ/2751 திரு.நீலன் சண்முகம்.
யா/கோ/2756 திரு.வல்லிபுரம் செல்லையா.
யா/கோ/2757 செல்வி.சிவபாக்கியம் சுப்பையா.
யா/கோ/2761 திரு.கந்தன் செல்லத்துரை.
யா/கோ/2781 திரு.கந்தன் செல்லத்துரை.
யா/கோ/2783 திரு.இளையதம்பி சங்கரப்பிள்ளை.
யா/கோ/2788 திரு.கணபதிப்பிள்ளை செல்லையா.
யா/கோ/2798 திரு.வைரவப்பிள்ளை சிவக்கொழுந்து.
யா/கோ/2806 திரு.செல்லையா சண்முகராசா.
யா/கோ/2809 திரு.பொன்னம்பலம் செல்லையா.
யா/கோ/2811 திரு.நாகமணி சீவரத்தினம்.
யா/கோ/2820 திருமதி.சறோஜினிதேவி சீவரத்தினம்.
யா/கோ/2825 திரு.நாகன் செல்லத்துரை காந்தராசா.
யா/கோ/2827 திரு.இரத்தினம் துரைராஜா.
யா/கோ/2868 திரு.பொன்னையா வேலும்மயிலும்.
யா/கோ/2878 திரு.சிவலைவேலுப்பிள்ளை.
யா/கோ/2882 திரு.ஆறுமுகம் வேலாயுதம்.
யா/கோ/2885 திரு.நாகன் வீரன்.
யா/கோ/2910 திரு.முத்து கந்தசாமி.
யா/கோ/2915 திருமதி.பொன்மலர் குமாரசாமி.
யா/கோ/2917 திரு.ஐயாத்துரை கந்தையா.
யா/கோ/2927 திரு.தம்பிப்பிள்ளை மகேஸ்வரன்.
யா/கோ/2929 திரு.திரவியம் மகேந்திரன்.
யா/கோ/2935 திரு.சபாபதி நல்லையா.
யா/கோ/2936 திரு.சுப்பையா நல்லதம்பி.
யா/கோ/2953 திரு.சபாபதி இராமலிங்கம்.
யா/கோ/2958 திரு.கதிரவேலுப்பிள்ளை இரத்தினவேலுப்பிள்ளை.
யா/கோ/2960 திரு.செல்லத்துரை இராசநாயகம்.
யா/கோ/2986 திருமதி.சிவக்கொழுந்து நடராஜா.
யா/கோ/2988 திருமதி.நாகமுத்து சுப்பிரமணியம்.
யா/கோ/2991 திரு.கதிரித்தம்பி சபாரத்தினம்.
யா/கோ/2992 திரு.சின்னையா சண்முகலிங்கம்.
யா/கோ/2997 திரு.வீரசிங்கம் சத்தியானந்தன்.
யா/கோ/2998 திரு.கணபதிப்பிள்ளை சின்னத்துரை.
யா/கோ/3003 திரு.கனகசபை சிவலிங்கம்.
யா/கோ/3004 திரு.சரவணமுத்து சுப்பிரமணியம்.

தொடரும்...

# தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டிற்கு கிராமங்கள் தோறும் விழிப்புணர்வூட்டல்

*– மாணவர்களும் எழுச்சியுடன் பங்கேற்பு*

(அலுவலக செய்தியாளர்)

எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சிப்பிரகடன மாநாட்டினையொட்டி தமிழ் தேசிய விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முனைப்புடன் செயற்படுத்தப்பட்டு வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

கிராமம் கிராமமாக மக்கள் தரிசனங்கள் மேற்கொள்ளப் பெற்று வருவதுடன் தமிழ் தேசிய விழிப்புணர்வை தூண்டும் வீதி நாடகங்களும் நடைபெற்று வருகின்றன.

நேற்றைய தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரி கலைப்பிரிவு மாணவர்கள் தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டினைச் சித்தரிக்கும் பதாகைகளுடன் பாரதிபுரம், கிருஸ்ணபுரம் கிராமங்களில் மக்கள் தரிசனங்களை மேற்கொண்டு தமிழ்தேசிய விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கியதனைக் காணக்கூடியதாகவிருந்தது. அதேபோன்று தமிழீழ வைப்பக ஊழியர்கள், கணேசபுரக் கிராம மக்களுடனும் கிளி. மாவட்ட கூட்டுறவு சபை ஊழியர்கள் திருவையாறு கிராம மக்களுடனும், கிளிநொச்சி சுகாதார சேவை திணைக்களத்தினர் சம்புக்குளம், கல்மடுநகர் கிராம மக்களுடனும் கிராமதரிசனங்களை மேற்கொண்டு விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கினர்.

மற்றும் கந்தபுரம் மேற்கு, யூனியன்குளம், காந்திகிராமம் ஆகிய பகுதிகளில் நேற்றையதினம் அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பிரகடன கிராமிய தெரிவுக்குழுவினர் மற்றும் அக்கராயன் மகாவித்தியாலய மாணவர்கள் இணைந்து மக்கள் தரிசனங்களை மேற்கொண்டு தமிழ் தேசிய விழிப்புணர்வு கருத்துரைகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வினை முன்னிட்டு நிகழ்வினை சித்தரிக்கும் பதாகைகள் கிராம ரீதியாகக் கட்டப்பட்டு வருவதுடன் போக்குவரத்து வாகனங்களில் மஞ்சள், சிவப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. (சோ)

# திருமலை பொது விளையாட்டு மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட சிறிலங்கா இராணுவம் கெடுபிடி

(திருமலை)

திருகோணமலை மாவட்ட பொது விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் விளையாடுவதற்கு இராணுவம் கெடுபிடியாக இருக்கின்றது. வீரர்களை விசாரணைகள், உடற்பரிசோதனைகள் மற்றும் பந்துகளை வெட்டிப்பார்க்கின்ற அநாகரிக செயல்களில் ஈடுபடுவதால் விளையாட்டு வீரர்களின் மனநிலை பாதிக்கப்பட்டு இராணுவத்திற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பொது விளையாட்டு மைதானத்தில் குவிக்கப்பட்ட இராணுவத்தால் தினமும் விளையாடுகின்ற வீரர்கள் மற்றும் வயது கூடியவர்கள் உடற்பயிற்சிகள் செய்ய முடியாமல் இருப்பதாகவும் இப்படிப்பட்ட நிலை நீடிக்குமானால் விளையாட்டு என்பது திருகோணமலை மாவட்டத்தில் கேள்விக்குறியாக மாறிவிடும் எனத் திருகோணமலை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தீபன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அரச நிறுவனங்களில் பணிபுரிகின்ற குறிப்பாக வட கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அரச ஊழியர்களின் நாளாந்த பயிற்சி, கடமைகள் கூட செய்ய முடியாத அளவிற்கு இராணுவத்தினர் மைதானத்தில் நிலைகொண்டிருப்பது ஒட்டுமொத்த இனவாத நடவடிக்கையே எனவும் நாளடைவில் திருகோணமலை மாவட்ட பொது விளையாட்டு மைதானம் இராணுவ முகாமாக மாறிவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## தமிழ்...

மோசமாகத் தாக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தற்போது அவர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகவும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும் கூட, ஊடகவியலாளர்கள் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகளை வைத்திருப்பது சட்டவிரோதமானதல்ல என்பதை தாம் சுட்டிக்காட்ட விரும்புவதாகவும் விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பல்ல எனவும் தெரிவித்துள்ள தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அரசாங்கமே விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் புலிகளுடன் தொடர்பு என்ற குற்றச்சாட்டைப் பயன்படுத்தி பேரினவாதிகள் தமிழ் ஊடகத்துறையை நசுக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுவருவதாகத் தாம் சந்தேகிக்க வேண்டியுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுடரொளி நாளிதழின் செய்தியாளர் யதுர்சன் பிரேமச்சந்திரன் நேற்று கோட்டை நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவர் மீது தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்யும் படியும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கின் விசாரணைகள் அடுத்த மாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (32)

## புலிகள்...

தினால் எதிர்பார்த்த அளவிலான அழுத்தங்களோ கண்டனங்களோ வராத நிலையிலேயே இவ்வாறான வேண்டுகோளை அது தனது பணியாளர்களினூடாகவும் தனது நெருங்கிய அபிமானிகளினூடாகவும் விடுத்துள்ளது.

வெளிநாடுகளிலுள்ள சிறிலங்கா தூதரங்களே அந்தந்த நாடுகளின் வெளிவிவகார அமைச்சகத்தின் கவனத்திற்கு இவ்வாறான விடயத்தைக் கொண்டு வந்து அவை கண்டன அறிக்கை வெளியிடுவதற்கு வழி செய்யும். அந்த வகையில் இம்முறை அவை மேற்கொண்ட முயற்சிகள் பெரிதாகப் பயன்தரவில்லை என்றே தெரியவருகிறது.

கதிர்காமரின் கொலையாளிகள் யார் என்பது தெரியாத காரணத்தால் பலநாடுகள் அவரின் மறைவையொட்டிய கண்டனத்தோடு இந்த விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டன. இந்நிலையிலேயே இவரின் மறைவின் மூலமான பயனைப் பெறுவதற்கு சிறிலங்கா முயன்று வருகின்றது.

ஐரோப்பிய நாடுகளில் புலிகள் அமைப்பைத் தடைசெய்ய வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் சிறிலங்காவின் இம் முயற்சி சமாதான முயற்சிகளுக்குப் பங்கம் விளைவிக்கும் ஒரு நடவடிக்கையென நோர்வே கருத்துத் தெரிவித்ததாகவும் அண்மையில் செய்தி வெளியாகியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## போர்நிறுத்த..

சந்திப்பில் வவுனியா மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் வவுனியா மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி அலை, நிர்வாக பொறுப்பாளர் ரமணன், மற்றும் வவுனியா மாவட்ட சமாதான செயலக இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் அடங்கிய குழுவினர் இராணுவத்தினரைச் சந்தித்தனர் இந்த விடயமும் கலந்துரையாடப்பட்டது

வவுனியாவில் தற்போது இராணுவத்தினர் சாதாரண மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சுற்றி வளைப்புக்களை ஏற்படுத்திக் கெடுபிடிகளை மீண்டும் ஆரம்பித்து இருப்பதாகவும் இந்த நடவடிக்கையானது போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் என்ன நிலைமை காணப்பட்டதோ அதே நிலையே தற்போதும் ஏற்பட்டுட்டிருப்பதாக ஞானம் தெரிவித்தார்.

நேற்று இராணுவத்தினர் ஓமந்தைப் பகுதியில் புதிய காப்பரண் ஒன்று அமைத்து ஆயுத முனையில் சோதனை நடவடிக்கை செய்து வருவதாகவும் கடந்த வாரத்தில் இரண்டு முறை எந்தவிதமான அறிவித்தல்களும் இல்லாமல் ஏ-9 சாலையினை மூடி மக்களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தினார்கள் என்றும் வவுனியாவில் அரசியல் பணிகளுக்கு வந்திருக்கும் அரசியல் போராளிகளின் மீதும், காரியாலயங்கள் மீதும், பணியாளர்களின் மீதும் தொடர்ந்தும் தாக்குதல்கள் இடம் பெற்று வருவதாகவும் இந்தக் தாக்குதல்களுக்கு நிச்சயமாக இராணுவத்தின் துணையும் அனுசரணையும் இருப்பதாக வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குற்றம் சாட்டியுள்ளார்

புரிந்துணர்வு உடன்படிக்கைப் பிரகாரம் இராணுவத்தினர் நடந்து கொள்ளவில்லை என்று ஞானம் தெரிவித்தார். வவுனியா மாவட்டத்தில் தமிழர்களுக்கு என்று இருக்கும் கலாச்சார மண்டபத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறவில்லை என்றும் மக்கள் தமது சொந்த இடங்களுக்கு சென்று மீள குடியமர முடியாத நிலை ஏற்பட்டு இருப்பதாகவும் ஞானம் தெரிவித்துள்ளார்.

. இந்தச் சந்திப்பு தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் எந்த விதமான கருத்தையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (21,10)

# பாடசாலைக்கான கட்டடப் பொருட்களை எடுத்து வர சிறிலங்காப்படையினர் தடை!

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தை மேற்கு, மடுபோன்ற பிரதேசங்களில் புதிதாக பாடசாலைக்கட்டடங்கள் கட்டுவதற்கு நிகொட் திட்டம் நிதி ஒதுக்கீடு செய்தபோதிலும் அதற்குரிய கட்டடப்பொருட்களை எடுத்துச் செல்வதற்கு சிறிலங்காப்படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

பாலம்பிட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு 27 இலட்சம் ரூபாவும் மருதமடு அரசினர் தமிழ்கலவன் பாடசாலைக்கு 27 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதனைக் கட்டி முடிப்பதற்கான பணியை தனியார் ஒப்பந்தகாரரிடம் வழங்கியபோதும் அந்த வேலைகளைப் பூர்த்தியாக்க முடியாமலுள்ளது.

இதற்கு வன்னி இராணுவ அதிகாரியின் அனுமதி தேவை எனக் கூறபபடுகின்றது. இதனால் அக்கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (18)

# மூக்குக்கண்ணாடி வழங்கல்

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த கண் பரிசோதனைக் குழுவினரால் நேற்று வட்டுவாகல் இடைத்தங்கல் முகாமில் கண்பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. இன்று உண்ணாப்புலவு முகாமிலும் 26 ஆம் திகதி வடமராட்சி கிழக்கு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன உபபணிமனையிலும், கண் பரிசோதனைகள் செய்து மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படும். எனவே இதில் பயன்பெற விரும்புவோர் இவ் இடங்களிற்கு சென்று கண்பரிசோதனை செய்து கண்ணாடிகளைப் பெற முடியும் என நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## யாழ்...

பல்கலைக்கழகத்தின் முக்கிய சந்தியான சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அமைந்துள்ள சந்தி, பல்கலைக்கழக பின்புறம் அமைந்துள்ள தபால் கட்டைச் சந்தி, உயர் தொழில் நுட்ப நிறுவனம் அமைந்துள்ள பகுதிகளிலேயே இரவு நேரத்திலும் இராணுவத்தினரின் நடமாட்டம் காணப்படும் இடங்களாகவுள்ளமை குறிப்பிடக் கூடியதாகும். (41)

## யுத்த நிறுத்த..

விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் உள்நாட்டிலேயே நடைபெறவேண்டும். பேச்சுக்கான இடமாக வெளிநாடுகளைத் தெரிவு செய்வதன் மூலம் தமது தன்னாட்சிக்கோரிக்கையை பிரச்சாரப்படுத்த முயலும் விடுதலைப்புலிகளின் யுக்திக்கு சிறிலங்கா அரசு இணங்கப்போவதில்லை.

“யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக உள்நாட்டில் பேச்சு நடத்தாமல் வெளிநாட்டில் நடத்த வேண்டும் என்பதற்கு தகுந்த விளக்கங்களை விடுதலைப்புலிகள் முன்வைக்காத வரையில் விடுதலைப்புலிகளின் கோரிக்கையை அரசுத்தரப்பு பரிசீலிக்கப் போவதில்லை. இது குறித்து நோர்வேத்தரப்பின் ஊடாக விடுதலைப்புலிகளுக்கு அறிவிக்க ஏற்பாடு செய்துள்ளோம்” என்றும் கூறியுள்ளார்.

## இரு...

வுள்ளதாகவும் கூறினர்.

இதனை ஏற்று தமது தேடுதல் நடவடிக்கைகளைக் கைவிட்ட மீனவர்கள் நண்பகல் வேளை படையினர் கூறியபடி கடற்படை முகாமுக்கு சென்று கைது செய்யப்பட்ட இரு மீனவர்களையும் விடுவிக்குமாறு கோரினர். ஆனால் பிரஸ்தாப இருமீனவர்களும் திருகோணமலை கடற்படையினரின் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களைப் பின்னர் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினர்.


படையினரது இந்த உறுதிமொழிகளால் மாறிமாறி ஏமாற்றமடைந்த மணற்காட்டு மீனவர்கள் வீதிகளில் இறங்கி படையினருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தியதால் கடற்படையினருக்கும் மீனவர்களுக்குமிடையான முறுகல் வலுப்பெற்றது. இதனையடுத்து மக்களின் கிளர்ச்சிகளைத் தடுப்பதற்காக அங்கு பெருமளவான படையினர் குவிக்கப்பட்டனர். இதனால் அப்பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவிவருகிறது.

இவ்விடயம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து படையினர் தம்மால் கைது செய்யப்பட்ட இரு மீனவரையும் விடுவிக்க உறுதியளித்துள்ளதாகவும் தெரிகிறது. (33)


முதலாம் ஆண்டு நினைவலைகளில்

தோற்றம் 15 . 07 . 1941

மறைவு 25 . 08 . 2005



அமரர் உயர்திரு

இராசேந்திரம் வரதராசா

(முன்னாள் வவுனியா புளியங்குளம் இந்துக் கல்லூரி அதிபரும், ஒய்வுபெற்ற கோட்டக்கல்வி பணிப்பாளர்–வவுனியா வடக்கு)

நிரந்தரமுகவரி:- 4 ஆம் வட்டாரம், முள்ளியவளை.

(6668)

தகவல்: குடும்பத்தினர்.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



**சிந்தனைக்கு**

வீரசுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்

தமிழீழ தேசியத் தலைவர்

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 25.08.2005

தொலைபேசி 060-2213244 மின் அஞ்சல்
தொலைநகல் 021-2283948 natham23 ela@ yahoo.com

## இயற்கை மீதான தாக்குதல்!

வடக்கு- கிழக்கில் இராணுவ முகாம்கள் பலப்படுத்தப் படுகின்றன; பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்படுகின்றன என்பது போன்ற அறிவிப்புக்கள் எல்லாம் தமிழர் தாயகத்தைச் சிதைக்கும் நடவடிக்கைகளில் சிங்களப் படையினர் தீவிரமாகச் செயற்படுகின்றனர் என்பதை வெளிப்படுத்தும் அறிவிப்புக்களே.

சிங்களப் பேரினவாதம் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்துவிட்ட அரச பயங்கரவாதம் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்களின் உயிரைப் பலியெடுத்ததோடு பல்லாயிரம் கோடி சொத்துக்களையும் அழித்தது. ஆனால் இவை மட்டும்தான் சிங்களப் பேரினவாதம் தமிழர் தாயகப் பகுதியில் மேற்கொண்ட அழிவு நடவடிக்கை என்பதல்ல.

சிங்களப் பேரினவாதம் தமிழர் தாயகத்தின் இயற்கை மீதான அழிப்பு நடவடிக்கையானது தமிழர் தாயகத்தின் பௌதிக அமைப்பினையும் இயற்கைச் சூழலையுமே பெரும் பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளதெனலாம். இதன் தாக்கமானது சிங்களப் பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் முடிவிற்கு கொண்டு வரப்படினும் பல ஆண்டுகள், ஏன் தசாப்தங்களுக்கு நீக்கப்பட முடியாதவையாக தமிழர் தாயகத்தின் பல்வேறு பௌதிக அம்சங்களிலும் பிரதிபலிப்பவையாக இருக்கும் என எதிர்பார்க்க முடியும்.

தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துள்ள சிங்கள ஆயுதப் படைத் தரப்பு பாதுகாப்பு என மேற்கொள்ளும் நடவடிக்கைகள் முற்றிலுமாகவே தமிழர் தாயகத்தின் பௌதிக அம்சங்களையும், பௌதிக வளங்களையும் சிதைப்பவையாகவும், இயற்கைச் சூழலில் பெரும் மாற்றத்தினை ஏற்படுத்துபவையாகவுமே உள்ளன.

சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் பௌதிக அம்சங்கள் மீது மேற்கொள்ளும் தாக்கமானது புதிய முகாம் ஒன்றை அமைப்பதிலிருந்து ஆரம்பிக்கின்றதெனலாம். இவ்வாறு ஆரம்பிக்கும் நடவடிக்கையானது இராணுவ முகாம்களை மீள, மீளப் புனரமைத்தல் என்ற ரீதியில் தொடர்ந்தவண்ணமேயுள்ளது.

முகாம் ஒன்று ஆரம்பிக்கப்படும்போது முதற்கட்டமாக அப்பகுதியில் இருக்கும் பல ஹெக்ரேயர் இயற்கைத் தாவரங்கள் அழிக்கப்படுகின்றன. அதேசமயம் விமானப் படைத்தளம் போன்றவை அமைக்கப்படுகையில் பல சதுர கிலோமீற்றர் இயற்கைத் தாவரங்கள் அழிக்கப்படுகின்றன. பெரும்பாலும் அப்பகுதியிலுள்ள தாவரப் போர்வையே முற்றாக அழிக்கப்படுகின்றது.


அடுத்த கட்டமாக, இப் பாரிய பிரதேசத்தைச் சூழ மண் அரண்கள் அமைக்கப்படுகின்றன. இம்மண் அரண்கள் தரைத் தோற்றத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை, தாக்கத்தை ஏற்படுத்துபவை யாகவுள்ளன. அத்தோடு காவலரண்கள் அமைக்கப்படுவதற்கெனவும், பாதுகாப்பிற்கெனவும், தோண்டப்படும் பெரும் பள்ளங்கள் பௌதிக ரீதியிலான தரைத்தோற்ற அமைப்புக்களில் மாற்றத்தைத் தோற்றிவிப்பவையாகியுள்ளன.

அடுத்த கட்டமாக காவலரண்களைப் பலப்படுத்துவதற்கென சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பு பெருமளவில் இயற்கைத் தாவரங்களை அழிக்கின்றது. குறிப்பாக காடுகள் அடர்ந்த பகுதிகளில் பெரும் காட்டு மரங்களும் யாழ். குடாநாடு போன்ற பகுதிகளில் பனை போன்ற தாவரங்களும் பெரும் எண்ணிக்கையில் அழிக்கப்படுபவையாகவுள்ளன.

சுருக்கமாகச் சொன்னால் இயற்கைச் சூழல் பாதிக்கப்படும் அளவிற்கு இத்தகைய அழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன. இத்தகைய அழிப்பிற்கு வன்னியில் ஜயசிக்குறு நடவடிக்கையின்போது மேற்கொண்ட பெரும் காடழிப்பும், ரிவிரச நடவடிக்கையின் பின்னர் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட பனையழிப்பு நடவடிக்கையையும் சுட்டிக்காட்டமுடியும்.

ஆனால் இத்தகைய அழிப்புக்கள், இராணுவம் ஒரு பிரதேசத்தைக் கைப்பற்றியதுடன் மேற்கொள்ளும் பாதுகாப்பு நடவடிக்கையுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. நிலைகொண்டுள்ள இராணுவம் காலத்திற்குக்காலம் தனது இருப்பு நிலையை உறுதிப் படுத்திக்கொள்வதற்காக மேற்கூறப்பட்ட அழிவு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்பவையாகவே உள்ளன. அதாவது முகாம் புனரமைப்பு, முகாம் பாதுகாப்பு அதிகரிப்பு போன்ற விடயங்கள் தொடர்ந்து இடம்பெறுவதனால் அழிப்பு நடவடிக்கைகளும் தொடர்ந்தவண்ணமே இருக்கும்.

இந்தவகையில் சிறிலங்கா ஆக்கிரமிப்பு இராணுவம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தமிழர் தாயகத்திலேயே பல்வேறு வகையிலும் பெரும் தாக்கத்தை விளைவிப்பவையாகவே உள்ளன. அதாவது தமிழர் தாயகத்தில் இயற்கையின்மீது சிங்கள ஆக்கிரமிப்பாளர் மேற்கொண்ட தாக்குதலானது தமிழர் தாயகத்தின் வனப்பை மாத்திரமல்ல எதிர்காலத்தில் தமிழரின் இருப்பையே கேள்விக்குறியாக்கிவிடும். ஆகையினால் மனிதப் படுகொலைகளைக் கண்டித்து நடத்தும் போராட்டத்தினை ஒத்ததான வகையில் இயற்கையைப் பாதுகாப்பதற்கான போராட்டங்களும் நடத்தப்பட வேண்டும். இவை தொடர்பாக விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட வேண்டும்.




# 5700 கோடி ரூபாய் நாணயத் தாள்கள் புதிதாக அச்சாகியுள்ளமையால் நாட்டுக்கு ஆபத்து

### - ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் 5700 கோடி ரூபா புதிய நாணயத்தாள்களை பதிப்பித்துள்ளது. இது நாட்டைப் பாதித்து நாட்டு மக்களைப் படுகுழியில் தள்ளும்- என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்; ஜே.வி.பி கட்சி இம்முறை சனாதிபதித்தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பதை நாங்கள் வரவேற்கிறோம்.

ஜே.வி.பி யின் அனுசரணையுடன் மகிந்த ராஜபக்ஷ சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் அன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தன சனாதிபதித் தேர்தலில் பெற்ற வெற்றியை விட மேலதிக வெற்றி வாய்ப்பு எமக்குக் கிடைக்கும் எனவும், சமாதான ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்து மகிந்த ராஜபக்ஷவிற்கு ஜே.வி.பி ஆதரவு அளிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி மிக ஆவலாக உள்ளதெனவும் கூறினார்.

தற்பொழுது அரசாங்கம் 5700 கோடி ரூபா புதிய நாணயத் தாள்களை அச்சடித்துள்ளதெனவும் இது நாட்டையும் பாதித்து நாட்டு மக்களைப் படுகுழியில் தள்ளும் என பந்துல குணவர்தன கூறியுள்ளார்.

# சனாதிபதித்தேர்தலில் வேட்பாளரை நிறுத்தும் முடிவை ஹெல உறுமய கைவிட்டது

### - யாருக்கும் ஆதரவில்லை என்கிறார் மெத்தானந்த தேரர்

(கொழும்பு)

சனாதிபதித்தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய வேட்பாளரை நிறுத்தும் தீர்மானத்தை கைவிட்டுள்ளது.

சனாதிபதித்தேர்தலுக்கு தங்களின் கட்சியின் சார்பில் சனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்தப் போவதாக ஜாதிக ஹெல உறுமய ஏற்கனவே அறிவித்திருந்தது. ஆனால் தற்பொழுது கட்சியின் சார்பில் சனாதிபதி வேட்பாளரை நிறுத்தப் போவதில்லை என அக்கட்சியின் தலைவர் எல்லாவெல மெத்தானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய சனாதிபதி வேட்பாளரை தேர்தலுக்கு நிறுத்தினால் பௌத்தர்களின் வாக்குகள் பிளவுபடுவதற்கு இடமுண்டு என மெத்தானந்த தேரர் குறிப்பிட்டிருந்தார்.

இரண்டு பிரதான வேட்பாளர்களான மகிந்த ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க இருவருக்கும் தமது கட்சி ஆதரவு வழங்காதெனவும், மேலும் கட்சிக் கிளைகளை நாடு முழுவதிலும் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென ஜாதிக ஹெல தலைவர் மெத்தானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# சனாதிபதித்தேர்தலில் ஆதரவு கோரும் மகிந்தவின் முயற்சி நிராகரிப்பு

### - ம. ம. முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் மகிந்தராஜபக்ஷவினால் மலையக மக்கள் முன்னணிக்கு விடுக்கப்பட்ட அழைப்பு இறுதி நேரத்தில் நிராகரிக்கப்பட்டுள்ளது.

சனாதிபதித்தேர்தல் தொடர்பான விடயங்களை ஆராயுமுகமாகவும், தேர்தல் சம்பந்தமான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் பிரதமர் மகிந்தராஜபக்ஷ ஊவா மாகாணசபை கேட்போர் கூடத்தில் விசேட கூட்டமொன்றை கடந்த 22 ஆம் திகதி நடத்தினார். அக்கூட்டத்திற்கு மலையக மக்கள் முன்னணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. இவ்அழைப்பு மலையக மக்கள் முன்னணி சார்பாக ஊவாமாகாண சபை உறுப்பினர் அருணாசலம் அரவிந்தகுமாருக்கு அனுப்பப் பட்டிருந்தது.

இதற்கான அழைப்பிதழில் சனாதிபதித்தேர்தல் தொடர்பான விடயங்கள் ஆராயப்படவிருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதனால் அழைப்பிதழை ஏற்றுக்கொள்ளும்படி மலையக மக்கள் முன்னணி தலைவரால் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் சனாதிபதித்தேர்தல் மற்றும் தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பாக இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரனுக்கு அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து மேற்படி கூட்டத்தில் பங்குகொள்வதை மலையக மக்கள் முன்னணி நிராகரித்தது.

# டக்ளசின் நடமாட்டங்களைக் குறைக்க உளவுப் பிரிவினர் அறிவுறுத்து

(கொழும்பு)

ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் நடமாட்டங்களைக் குறைத்துக்கொள்ளுமாறு உளவுப் பிரிவு அவருக்கும் அவரது மெய்ப்பாதுகாவலர்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தற்கொலைத் தாக்குதல் மூலம் கொல்வதற்காக இரு பெண் தற்கொலையாளிகளை கொழும்புக்குள் ஊடுருவியிருப்பதாகத் தமக்கு தகவல் கிடைத்துள்ளதென உளவுப் பிரிவு தெரிவித்துள்ளது. இதனையடுத்தே இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

# வாகன உதிரிப்பாகங்களை திருடிய குழு கைது!

வாகன உதிரிப்பாகங்களைத் திருடி விற்பனை செய்து வந்த குழுவொன்று மிரிஹானை விசேட புலனாய்வுப் பிரிவினரிடம் சிக்கியது. கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் உட்பட நால்வரை மேற்படி புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர். மேற்படி வர்த்தகருக்குச் சொந்தமான மஹரகம நாவின்ன பகுதியிலுள்ள வீட்டை சுற்றி வளைத்த போதே பெருந்தொகையான வாகன உதிரிப்பாகங்களையும் பொலிசார் மீட்டுள்ளனர்.

# தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டிற்கு கிராமங்கள் தோறும் விழிப்புணர்வூட்டல்

### – மாணவர்களும் எழுச்சியுடன் பங்கேற்பு

(அலுவலக செய்தியாளர்)

எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சிப்பிரகடன மாநாட்டினையொட்டி தமிழ் தேசிய விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முனைப்புடன் செயற்படுத்தப்பட்டு வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

கிராமம் கிராமமாக மக்கள் தரிசனங்கள் மேற்கொள்ளப் பெற்று வருவதுடன் தமிழ் தேசிய விழிப்புணர்வை தூண்டும் வீதி நாடகங்களும் நடைபெற்று வருகின்றன.

நேற்றைய தினம் கிளிநொச்சி மத்திய கல்லூரி கலைப்பிரிவு மாணவர்கள் தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டினைச் சித்தரிக்கும் பதாகைகளுடன் பாரதிபுரம், கிருஸ்ணபுரம் கிராமங்களில் மக்கள் தரிசனங்களை மேற்கொண்டு தமிழ்தேசிய விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கியதனைக் காணக்கூடியதாகவிருந்தது. அதேபோன்று தமிழீழ வைப்பக ஊழியர்கள், கணேசபுரக் கிராம மக்களுடனும் கிளி. மாவட்ட கூட்டுறவு சபை ஊழியர்கள் திருவையாறு கிராம மக்களுடனும், கிளிநொச்சி சுகாதார சேவை திணைக்களத்தினர் சம்புக்குளம், கல்மடுநகர் கிராம மக்களுடனும் கிராமதரிசனங்களை மேற்கொண்டு விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கினர்.

மற்றும் கந்தபுரம் மேற்கு, யூனியன்குளம், காந்திகிராமம் ஆகிய பகுதிகளில் நேற்றையதினம் அக்கராயன் பிரதேச தேசிய எழுச்சிப் பிரகடன கிராமிய தெரிவுக்குழுவினர் மற்றும் அக்கராயன் மகாவித்தியாலய மாணவர்கள் இணைந்து மக்கள் தரிசனங்களை மேற்கொண்டு தமிழ் தேசிய விழிப்புணர்வு கருத்துரைகளை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வினை முன்னிட்டு நிகழ்வினை சித்தரிக்கும் பதாகைகள் கிராம ரீதியாகக் கட்டப்பட்டு வருவதுடன் போக்குவரத்து வாகனங்களில் மஞ்சள், சிவப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. (சோ)

# பாடசாலைக்கான கட்டடப் பொருட்களை எடுத்து வர சிறிலங்காப்படையினர் தடை!

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள மாந்தை மேற்கு, மடுபோன்ற பிரதேசங்களில் புதிதாக பாடசாலைக்கட்டடங்கள் கட்டுவதற்கு நிகொட் திட்டம் நிதி ஒதுக்கீடு செய்தபோதிலும் அதற்குரிய கட்டப்பொருட்களை எடுத்துச் செல்வதற்கு சிறிலங்காப்படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

பாலம்பிட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு 27 இலட்சம் ரூபாவும் மருதமடு அரசினர் தமிழ்கலவன் பாடசாலைக்கு 27 இலட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டு அதனைக் கட்டி முடிப்பதற்கான பணியை தனியார் ஒப்பந்தகாரரிடம் வழங்கியபோதும் அந்த வேலைகளைப் பூர்த்தியாக்க முடியாமலுள்ளது.

இதற்கு வன்னி இராணுவ அதிகாரியின் அனுமதி தேவை எனக் கூறபடுகின்றது. இதனால் அக்கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (18)

# மூக்குக்கண்ணாடி வழங்கல்

நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினால் அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த கண் பரிசோதனைக் குழுவினரால் நேற்று வட்டுவாகல் இடைத்தங்கல் முகாமில் கண்பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. இன்று உண்ணாப்புலவு முகாமிலும் 26 ஆம் திகதி வடமராட்சி கிழக்கு நலவாழ்வு அபிவிருத்தி நிறுவன உபபணிமனையிலும், கண் பரிசோதனைகள் செய்து மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்படும். எனவே இதில் பயன்பெற விரும்புவோர் இவ் இடங்களிற்கு சென்று கண்பரிசோதனை செய்து கண்ணாடிகளைப் பெற முடியும் என நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

# திருமலை பொது விளையாட்டு மைதானத்தில் பயிற்சியில் ஈடுபட சிறிலங்கா இராணுவம் கெடுபிடி

(திருமலை)

திருகோணமலை மாவட்ட பொது விளையாட்டு மைதானத்தில் விளையாட்டு வீரர்கள் விளையாடுவதற்கு இராணுவம் கெடுபிடியாக இருக்கின்றது. வீரர்களை விசாரணைகள், உடற்பரிசோதனைகள் மற்றும் பந்துகளை வெட்டிப்பார்க்கின்ற அநாகரிக செயல்களில் ஈடுபடுவதால் விளையாட்டு வீரர்களின் மனநிலை பாதிக்கப்பட்டு இராணுவத்திற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை பொது விளையாட்டு மைதானத்தில் குவிக்கப்பட்ட இராணுவத்தால் தினமும் விளையாடுகின்ற வீரர்கள் மற்றும் வயது கூடியவர்கள் உடற்பயிற்சிகள் செய்ய முடியாமல் இருப்பதாகவும் இப்படிப்பட்ட நிலை நீடிக்குமானால் விளையாட்டு என்பது திருகோணமலை மாவட்டத்தில் கேள்விக்குறியாக மாறிவிடும் எனத் திருகோணமலை மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தீபன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; அரச நிறுவனங்களில் பணிபுரிகின்ற குறிப்பாக வட கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அரச ஊழியர்களின் நாளாந்த பயிற்சி, கடமைகள் கூட செய்ய முடியாத அளவிற்கு இராணுவத்தினர் மைதானத்தில் நிலைகொண்டிருப்பது ஒட்டுமொத்த இனவாத நடவடிக்கையே எனவும் நாளடைவில் திருகோணமலை மாவட்ட பொது விளையாட்டு மைதானம் இராணுவ முகாமாக மாறிவிடுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## யாழ்...

பல்கலைக்கழகத்தின் முக்கிய சந்தியான சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அமைந்துள்ள சந்தி, பல்கலைக்கழக பின்புறம் அமைந்துள்ள தபால் கட்டைச் சந்தி, உயர் தொழில் நுட்ப நிறுவனம் அமைந்துள்ள பகுதிகளிலேயே இரவு நேரத்திலும் இராணுவத்தினரின் நடமாட்டம் காணப்படும் இடங்களாகவுள்ளமை குறிப்பிடக் கூடியதாகும். (41)

## யுத்த நிறுத்த..

விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுக்கள் உள்நாட்டிலேயே நடைபெறவேண்டும். பேச்சுக்கான இடமாக வெளிநாடுகளைத் தெரிவு செய்வதன் மூலம் தமது தன்னாட்சிக்கோரிக்கையை பிரச்சாரப்படுத்த முயலும் விடுதலைப்புலிகளின் யுக்திக்கு சிறிலங்கா அரசு இணங்கப்போவதில்லை.

"யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக உள்நாட்டில் பேச்சு நடத்தாமல் வெளிநாட்டில் நடத்த வேண்டும் என்பதற்கு தகுந்த விளக்கங்களை விடுதலைப்புலிகள் முன்வைக்காத வரையில் விடுதலைப்புலிகளின் கோரிக்கையை அரசுத்தரப்பு பரிசீலிக்கப் போவதில்லை. இது குறித்து நோர்வேத்தரப்பின் ஊடாக விடுதலைப்புலிகளுக்கு அறிவிக்க ஏற்பாடு செய்துள்ளோம்" என்றும் கூறியுள்ளார்.

## தமிழ்...

மோசமாகத் தாக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் தற்போது அவர் அவசரகாலச் சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாகவும் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருந்தாலும் கூட, ஊடகவியலாளர்கள் விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகளை வைத்திருப்பது சட்டவிரோதமானதல்ல என்பதை தாம் சுட்டிக்காட்ட விரும்புவதாகவும் விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பல்ல எனவும் தெரிவித்துள்ள தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அரசாங்கமே விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் புலிகளுடன் தொடர்பு என்ற குற்றச்சாட்டைப் பயன்படுத்தி பேரினவாதிகள் தமிழ் ஊடகத்துறையை நசுக்குவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுவருவதாகத் தாம் சந்தேகிக்க வேண்டியுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுடரொளி நாளிதழின் செய்தியாளர் யதுர்சன் பிரேமச்சந்திரன் நேற்று கோட்டை நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அவர் மீது தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்யும் படியும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். இந்த வழக்கின் விசாரணைகள் அடுத்த மாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (32)

## இரு...

வுள்ளதாகவும் கூறினர்.

இதனை ஏற்று தமது தேடுதல் நடவடிக்கைகளைக் கைவிட்ட மீனவர்கள் நண்பகல் வேளை படையினர் கூறியபடி கடற்படை முகாமுக்கு சென்று கைது செய்யப்பட்ட இரு மீனவர்களையும் விடுவிக்குமாறு கோரினர். ஆனால் பிரஸ்தாப இருமீனவர்களும் திருகோணமலை கடற்படையினரின் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களைப் பின்னர் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினர்.

படையினரது இந்த உறுதிமொழிகளால் மாறிமாறி ஏமாற்றமடைந்த மணற்காட்டு மீனவர்கள் வீதிகளில் இறங்கி படையினருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தியதால் கடற்படையினருக்கும் மீனவர்களுக்குமிடையான முறுகல் வலுப்பெற்றது. இதனையடுத்து மக்களின் கிளர்ச்சிகளைத் தடுப்பதற்காக அங்கு பெருமளவான படையினர் குவிக்கப்பட்டனர். இதனால் அப்பகுதியில் தொடர்ந்தும் பதற்றம் நிலவிவருகிறது.

இவ்விடயம் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து படையினர் தம்மால் கைது செய்யப்பட்ட இரு மீனவரையும் விடுவிக்க உறுதியளித்துள்ளதாகவும் தெரிகிறது. (33)

## புலிகள்...

தினால் எதிர்பார்த்த அளவிலான அழுத்தங்களோ கண்டனங்களோ வராத நிலையிலேயே இவ்வாறான வேண்டுகோளை அது தனது பணியாளர்களினூடாகவும் தனது நெருங்கிய அபிமானிகளினூடாகவும் விடுத்துள்ளது.

வெளிநாடுகளிலுள்ள சிறிலங்கா தூதரங்களே அந்தந்த நாடுகளின் வெளிவிவகார அமைச்சகத்தின் கவனத்திற்கு இவ்வாறான விடயத்தைக் கொண்டு வந்து அவை கண்டன அறிக்கை வெளியிடுவதற்கு வழி செய்யும். அந்த வகையில் இம்முறை அவை மேற்கொண்ட முயற்சிகள் பெரிதாகப் பயன்தரவில்லை என்றே தெரியவருகிறது.

கதிர்காமரின் கொலையாளிகள் யார் என்பது தெரியாத காரணத்தால் பலநாடுகள் அவரின் மறைவையொட்டிய கண்டனத்தோடு இந்த விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டன. இந்நிலையிலேயே இவரின் மறைவின் மூலமான பயனைப் பெறுவதற்கு சிறிலங்கா முயன்று வருகின்றது.

ஐரோப்பிய நாடுகளில் புலிகள் அமைப்பைத் தடைசெய்ய வேண்டுகோள் விடுக்கப்பட்டதாகவும் சிறிலங்காவின் இம் முயற்சி சமாதான முயற்சிகளுக்குப் பங்கம் விளைவிக்கும் ஒரு நடவடிக்கையென நோர்வே கருத்துத் தெரிவித்ததாகவும் அண்மையில் செய்தி வெளியாகியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## போர்நிறுத்த..

சந்திப்பில் வவுனியா மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் வவுனியா மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி அலை, நிர்வாக பொறுப்பாளர் ரமணன், மற்றும் வவுனியா மாவட்ட சமாதான செயலக இணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் அடங்கிய குழுவினர் இராணுவத்தினரைச் சந்தித்தனர் இந்த விடயமும் கலந்துரையாடப்பட்டது

வவுனியாவில் தற்போது இராணுவத்தினர் சாதாரண மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் சுற்றி வளைப்புக்களை ஏற்படுத்திக் கெடுபிடிகளை மீண்டும் ஆரம்பித்து இருப்பதாகவும் இந்த நடவடிக்கையானது போர் நிறுத்த உடன்படிக்கைக்கு முன்னர் என்ன நிலைமை காணப்பட்டதோ அதே நிலையே தற்போதும் ஏற்பட்டுட்டிருப்பதாக ஞானம் தெரிவித்தார்.

நேற்று இராணுவத்தினர் ஓமந்தைப் பகுதியில் புதிய காப்பரண் ஒன்று அமைத்து ஆயுத முனையில் சோதனை நடவடிக்கை செய்து வருவதாகவும் கடந்த வாரத்தில் இரண்டு முறை எந்தவிதமான அறிவித்தல்களும் இல்லாமல் ஏ-9 சாலையினை மூடி மக்களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தினார்கள் என்றும் வவுனியாவில் அரசியல் பணிகளுக்கு வந்திருக்கும் அரசியல் போராளிகளின் மீதும், காரியாலயங்கள் மீதும், பணியாளர்களின் மீதும் தொடர்ந்தும் தாக்குதல்கள் இடம் பெற்று வருவதாகவும் இந்தக் தாக்குதல்களுக்கு நிச்சயமாக இராணுவத்தின் துணையும் அனுசரணையும் இருப்பதாக வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குற்றம் சாட்டியுள்ளார்


புரிந்துணர்வு உடன்படிக்கைப் பிரகாரம் இராணுவத்தினர் நடந்து கொள்ளவில்லை என்று ஞானம் தெரிவித்தார். வவுனியா மாவட்டத்தில் தமிழர்களுக்கு என்று இருக்கும் கலாச்சார மண்டபத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறவில்லை என்றும் மக்கள் தமது சொந்த இடங்களுக்கு சென்று மீள குடியமர முடியாத நிலை ஏற்பட்டு இருப்பதாகவும் ஞானம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் எந்த விதமான கருத்தையும் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (21,10)


## முதலாம் ஆண்டு நினைவலைகளில்

தோற்றம் 15 . 07 . 1941

மறைவு 25 . 08 . 2005



அமரர் உயர்திரு

இராசேந்திரம் வரதராசா

(முன்னாள் வவுனியா புளியங்குளம் இந்துக் கல்லூரி அதிபரும், ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி பணிப்பாளர்–வவுனியா வடக்கு)

நிரந்தரமுகவரி:- 4 ஆம் வட்டாரம், முள்ளியவளை.

(6668)

தகவல்: குடும்பத்தினர்.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.